சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 03	ஆகஸ்ட் - 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 03	AUGUST - 2022	Rs. 15/-



நந்தன் என்ற திருநாளைப் போவார்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ. **550** மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-1 ஆகஸ்ட் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

செல்வி. Dr.S.சௌம்யா, ஊட்டி.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

உன் கோரிக்கைகளை நான் என்றும் நிராகரித்தது கிடையாது. நிச்சயம் அது நிறைவேறும்.உன் கனவுகள் அனைத்தும் மெய்ப்படும். முதலில் உன் மனதில் தோன்றும் தேவையற்ற சஞ்சலத்தை அழித்து விடு.

உன் வார்த்தைக்கு யாரும் மதிப்பளிக்கவில்லையே என்று தானே நீ அதிகம் வருந்துகிறாய். வருந்தாதே! உன் நல் வார்த்தைகளுக்கு செவி சாய்க்காமல் வழிநடப்பவர்களுக்கு தான் இழப்பு. உனக்கில்லை.

உன்னைச் சுற்றியுள்ளவர்களில் யார் நல்லவர், கெட்டவர், என்ற சந்தேக கண் கொண்டு பார்க்காதே. நீ உன் கடமையை செய். ஒருவேளை அவர்கள் உனக்கு தீங்கிழைத்தால் அதற்கான தண்டனையை நிச்சயம் அவர்கள் அனுபவிப்பார்கள்.

கவலைகளை எல்லாம் தூக்கி எறி, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்த்து நில். அப்போது தான் உன்னால் தடைகளை தகர்த்து வெற்றி அடைய முடியும். உனது துயரங்கள், வியாதிகள், கடன் சுமைகள், அனைத்தும் உன்னை விட்டு விலகும்.

எப்போழுதும் உன்னைக் கைவிட மாட்டேன் என் ஆசீர்வாதங்கள் என்றும் உனக்கு துணை நிற்கும்.என் பரிபூரண அருளும் ஆசிர்வாதமும் அன்பும் பெற்ற என் பிள்ளை நீ !

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து ஒன்பதாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 03.07.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

இம்மாத இதழை "பாராயணப் பகலவன்" திரு.சுந்தர்சாய் அவர்கள் வெளியிட, சாயி பக்தரும், சாயி சேவகருமான, அண்ணாநகர் திரு. அண்ணாமலை அவர்கள் பெற்றுக் கொண்டு சிற்பித்தார்கள். மேலும் பாபாவைப் பற்றிய அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

விழாவில் "பாராயணப் பகலவன்" திரு.சுந்தர்சாய் அவர்கள், திரு. அகஸ்டின் அவர்கள், திரு.அண்ணாமலை அவர்கள், திரு. மதன் அவர்கள், திருமதி.சாந்தி வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்மாதம் நமது இதழுக்கு லண்டனைச் சேர்ந்த திருமதி. வள்ளி திருமுருகன் அவர்கள் ஒரு வருட சந்தாதாரராக பத்து நபர்களையும், தஞ்சை திரு. ஸ்ரீநிவாசன் சாய்ராம் அவர்கள் மூன்று வருட சந்தாதாரர்கள் மூன்று நபர்களையும், தேனி வெங்கடேசன் சாய்ராம் அவர்கள் ஒரு வருட சந்தாதாரர்களாக மூன்று நபர் களையும் இணைத்து சாயி சேவை செய்துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.



இம்மாத இதழ் 5 ஆம் ஆண்டு விழா மலராக மலர்ந்திருக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து நல்லாதரவு தந்து கொண்டிருக்கும், அனைத்து பாபா பக்தர்களுக்கும், வாசகர்களுக்கும், எங்களது மன மார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறோம். தொடர்ந்து தங்களது பேராதரவை எங்களுக்கு தந்து சாயி சேவையில் இணைந்திருக்கும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

நமது இதழுக்கான சந்தாதாரர்களின் எண்ணிக்கையை அடுத்த 6 ஆம் ஆண்டு விழாவிற்குள் 1000 என்ற எண்ணிக்கையை எட்ட வேண்டும் என்ற லட்சியத்துடன் செயல்படுவோம். அது சாயி சேவர்களும், வாசகர்களுமாகிய உங்களால்தான் சாத்தியமாகும். எனவே நீங்கள் மனது வைத்தால்தான் நடக்கும். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் புதிய சந்தாதாரர்களை இணைத்து சாயி சேவையில் இணையும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இம்மாத இதழில் புதிய பகுதியாக பக்த லீலாமிர்தம் தொடங்குகின்றது. பகவான் சாயி பாபாவின் பக்தர்கள் தங்களுக்கு நடந்த பாபாவின் அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றோம்.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப் பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந் தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.







மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!
வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

விஸ்வநாத் நூல்கர் வரமா சாபமா?

லஷ்மண் நூல்கர் ஜானகி தம்பதியினர் பாபாவின் கருணையால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். தங்களது வாழ்வே பாபாவிற்காக என்று வாழ்ந்தவர்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சீரடி வந்து பாபாவின் தரிசனத்தை பெறத்தவறுவதில்லை.

அப்பேர்பட்ட தம்பதியினருக்கு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாபாவின் பேரருளால் 1889 ல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு விஸ்வநாதன் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். அவர் புனேயில் உள்ள நியூ இங்க்லீஷ் ஸ்கூல் என்னும் பள்ளியில் ஆரம்பக் கல்வியும், டெக்கான் காலேஜ் ஆப் காமர்ஸ் என்ற கல்லூரியில் உயர் கல்வியும் பயின்றார். பின்னர் அவர் மாநகராட்சியில் பணியாற்றினார்.

அவர் முதன்முதலாக 1909 ஆம் ஆண்டு தன் தந்தையோடு சீரடிக்கு வந்தார். பெற்றோர்களால் செல்லமாக விசு என்று அழைக்கப்படும் அவரை பாபா, உடனடியாக " சாலா" (பள்ளி) விற்கு செல்லுமாறு பணித்தார். பள்ளி என்று அழைக்கப்படுவது இராதாகிருஷ்ண மாயியின் இல்லத்தைக் குறிப்பதாகும். இரா தாகிருஷ்ணமாயியின் இல்லம் ஆன்மீகத்தின் உச்சத்தில் இருக்கக் கூடியதாகும்.

அங்கு பாபாவால் அனுப்பப்பட்ட ஒரு சிலர் உயர்ந்த ஆன்மீக ஞானம் பெற்றதை நாம் அறிவோம். அதே போன்று பாபா, விஸ்வநாதனும் சிறந்த ஆன்மீக ஞானம் பெற வேண்டும் என்ற விருப்பத்தினாலேயே விசுவை சாலாவிற்கு அனுப்பினார். ஆனால் மனித சென்மங்களிடையே உள்ள பற்று, பாசம் என்பது இறைவனின் திட்டத்தையே எப்படி மாற்றுகின்றது என்பதே விசுவின் கதையாகும்.

பாபாவின் தரிசனத்திற்குப் பின்பு விசு, தன்னுடைய பெற்றோரோடு இல்லம் அதன் பிறகு கல்லூரியில் சேர்ந்த பிறகும், அவரது மனம் எண்ணவோ சீரடியிலேயே இருந்தது. சீரடியைப் பற்றியும் அங்கே உறைய்ம் தெய்வம் சாயி பாபாவைப் பற்றியும் அவர் மனதில் வைராக்கியத்தை வளர்த்துக் கொண்டார்.

காலப்போக்கில், அவருக்கு சீரடிக்குச் சென்று அங்கேயே தங்கி பாபாவிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற தணியாத தாகம் பிறந்தது. அது நிறைவேறக்கூடிய நல்ல அதிர்ஷ்டத்தையும் அவர் பெற்றிருந்தார் என்றே தோன்றுகின்றது. ஏனெனில் சீரடிக்கு வந்தால் பாபாவின் கவனிப்பு விசுவின் மீதே இருந்தது.

கல்லூரி படிப்பை முடித்ததும் ஒருவரிடமும் கூறாமல் சன்னியாசி ஆக வேண்டும் என்று வீட்டை விட்டு சீரடிக்கு வந்துவிட்டார். அவர் வீட்டை விட்டுச் சென்றது அவரது பெற்றோருக்கு மிகுந்த கவலையளித்தது. அவன் சீர டிக்குத் தான் சென்றிருக்க

வேண்டும் என்று அறிந்து கொண்ட அவனது பெற்றோர், விசு எப்படியிருக்கின்றான், என்ன செய்து கொண்டிருக்கின்றான் என்று பார்ப்பதற்காக சீரடிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சீரடிக்கு செல்வதற்கு முன்பாக கோதாவரி நதியில் குளிப்பதற்காக சென்ற அவரது குடும்பத்தார் அங்கே பாபாவைப் போன்று உடையணிந்த ஓர் இளம் துறவியைக் கண்டார்கள். அருகில் சென்று கண்டதும் அது தங்களுடைய மகன் விஸ்வநாதன் என்று அறிந்ததும் திடுக்கிட்டுப் போனார்கள்.



அவனுடைய சன்யாசி கோலத்தைக் கண்டு விசுவின் குடும்பத்தார் மிகுந்த மன உளைச்சல் அடைந்தனர். உடனே பாபாவிடம் சென்று முறையிட்டனர். மனிதன் எப்போதும் பாசத்திற்கு அடிமையாகின்றவன். அவனுக்கு எப்போதும் கூலுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பது பாபாவிற்கு தெரியாதா? விசுவை சமாதானப்படுத்தி சில மாதங்களுக்கு அவரின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு விசு வீட்டில் இருந்து கொண்டே படித்து பட்டம் பெற்று மாநகராட்சியில் பணிபுரிந்தார்.

பாபா அவரை அன்போடு "கிப்ரா" (நீண்ட தலைமுடியைக் கொண்டவன்) என்று அழைப்பார்.

1914 ல் சுசீலா ஜெமெனிஸ் என்ற பெண்ணை விசு மணந்து கொண்டார். மணமகளை பாபாவே தேர்ந்தெடுத்தார். விசுவின் தந்தை

தன் மகனுக்கு மணமுடிக்கத்தக்க இரண்டு பெண்களின் புகைப்படத்தை கொண்டுவந்து பாபாவிடம் நீட்டினார்.

பாபா தன்னுடைய விரலை சுசீலாவின் படத்தின் மீது வைத்தார். தாம் பணிபுரிந்த பூனேயிலேயே வசித்த விசு சுசீலா தம்பதியினருக்கு ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்து சம்சார சாகரத்தில் உழன்றார் என்பதை கூறவும் வேண்டுமோ?

இறைவன் எப்போதும் வரம் மட்டுமே கொடுக்கின்றான். மனிதன்தான் அதை எப்போதும் சாபமாகவே மாற்றிக் கொள்கிறான். எல்லாம் இறைவன் செயல் எனும் மனிதன், இறைவன் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளாமல், தான் கேட்பதையே இறைவன் கொடுக்க வேண்டும் என்று அடம் பிடிப்பது ஏனோ?

இப்படித்தான் நம்மில் பலர் நமது கர்ம வினை நீங்க நல்ல சற்குரு கிடைத்தும் அவர் கூறுவதை கேட்காது. நாம் கேட்பதை அவர்தரவேண்டும் என்று விரும்பி பெற்று, பின்னர் அவதியுறுகிறார்கள்.

குருவைப் பணிவோம்!
குறைவின்றி வாழ்வோம்!

ஸ்ரீசாயிநாத ஸ்தவன மஞ்சரியின் மகிமை



ஸ்ரீ ஷிர்டி சாய்பாபாவைப் போற்றிப் புகழும் "ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி" என்ற துதிமாலை, பாபா சீரடியில் வாழ்ந்த போதே, 1918ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி கண்பத்ராவ் தத்தாரேய சஹஸ்ரபுத்தே என்ற இயற்பெயரைக் கொண்ட திரு.ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களால் எழுதி முடிக்கப்பட்டது. இதற்குப்பின் 37 தினங்களில், அக்டோபர் 15 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று பாபா மஹாசமாதி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதிமாலையில் 146 முதல் 156 வரை உள்ள ஸ்லோகங்கள், இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ்சரியை படிப்பதினால் கிடைக்கும் பலன்களும், தினமும் இந்த ஸ்தவனமஞ்சரி ஸ்துதியை படிப் பவர்கள் அடையப்போகும் பலவித நன்மைகளைப் பற்றியும் தெள்ளத்தெளிவாக விரிவாக கூறப்பட்டுள்ளது.

தினந்தோறும் தவறாமல் தொடர்ந்து பாராயணம் செய்யப்பட வேண்டிய புனிதநூல் இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவனமஞ் சரி ஆகும்.

இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ் சரி ஸ்துதிமாலையானது ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவின் பரிபூரண ஆசியைப் பெற்ற ஸ்துதியாகும்.

எனவே, சாய் பக்தர்கள் அனைவரும் தவறாமல் பாராயணம் செய்யும்படியும், தினமும் நித்யபாராயணம் செய்யும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதி யைப் தொடர்ந்து படிப்பதனால் கிடைக் கும் பலன்களை கீழ்காணுமாறு ஸ்ரீ தாஸ்கணு மஹாராஜ் கூறுகிறார்,

ஓ.. ஸாயீமஹாராஜ்! இந்த ஸ்ரீசாயிநாத ஸ் த வ ன ம ஞ் ச ரி ஸ் து தி யை யார் யாரெல்லாம் அன்புடன் படிக்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொருவரின் ஆசைகளையும் தயவுசெய்து நிறைவேற்றுங்கள் !

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைப் படிப்பவர்களின் மூன்று விதமான தாபங்களும், துன்பங்களும் ஒரு ஆண்டிற்குள் நீங்கிவிடும் என்பதே இந்த ஸ்துதி மீதான உங்களின் நிலைத்த ஆசியாக இருக்கட்டும்.

தினமும் குளித்து முடித்த உடனேயே

மனதில் முழுமையான நம்பிக்கையுடன் தொடர்ந்து இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியை நித்யபாராயணம் செய்திடல் வேண்டும் !

அப்படித் தினமும் பாராயணம் செய்ய முடியாவிட்டாலும், வாராவாரம் வியாழக் கிழமை தோறும் பகவான் சாய்பாபாவை வணங்கி, அவருடைய உருவத்தை மனதில் நினைத்து இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியை பாராயணம் செய்யுங்கள்.

இதுவும்கூட முடியாவிட்டால், மாதாமாதம் வரும் இரண்டு ஏகாதசி நாட்களில் மட்டுமாவது இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியை பாராயணம் செய்யுங்கள். அப்படிச் செய்வதினால் ஏற்படும் முழுப்பலனையும் விளைவுகளையும் கண்டு நீங்களே ஆச்சர்யப்படுவீர்கள்.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைப் படிப்பவர்களுக்கு இறுதியில் உயர்ந்த அருளினை குருமூர்த்தி அளிப்பார். இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைக் கேட்பவர்களுக்கு இவ்வுலக ஆசைகளை உடனடியாக முழுமையாக நிறைவேற்றுவார்.

இந்த ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ்சரி ஸ்துதியைத் திரும்பத் திரும்ப பாராயணம் செய்வதால் முட்டாள்களுங்கூட கூர்மையான புத்தியைப் பெற்று அறிவாளிகள் ஆவார்கள்.

எவருக்காவது வாழ்நாள் (ஆயுட் காலம்) குறைவாக இருப்பின், இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைப் படிப்பதால் நூறாண்டு காலம் ஆயுள் பெற்றவராகிவிடுவார்கள்.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைத் தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால், செல்வம் குறைவாக (ஏழையாக) இருந்தாலும்கூட, குபேரன் அவர்கள் வீட்டில் வந்து தங்கி அவருக்கு சேவை செய்வான். இது சத்தியம் இது சத்தியம் இது சத்தியம் என மூன்று முறை கூறுகிறேன்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள்



இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியை தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால், குழந்தைப்பேறு கிடைக்கும்.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதியைத் தினமும் படிப்பவர்களின் வியாதிகள் முற்றிலுமாக குணமாகும்.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ் சரி ஸ்துதியைத் திரும்ப திரும்ப படித் தால், பயமும் மனக்கவலைகளும் பறந்தோடிவிடும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். அழிவற்ற பிரம்மஞானத்தை உணர்வார்கள்.

ஓ அறிவுடையவர்களே ! நீங்கள் இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி ஸ்துதிகளின் மீது முழுமனத்துடனான உறுதியான நம்பிக்கை கொள்ளுங்கள்.

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ் சரி ஸ்துதியைப் பற்றிய வீணான சந்தேகங்கள், தவறான எண்ணங்களுடன் கூடிய அவநம்பிக்கை ஆகியவற்றுக்கு கொஞ்சம் கூட மனதில் இடம் கொடுத்து விடாதீர்கள் !

இந்த ஸ்ரீசாயிநாத ஸ்தவனமஞ்சரி பாராயணம் செய்துமுடித்த கையோடு, ஒவ்வொரு நாளும் இரண்டு ரூபாய் காணிக்கையை ஸ்ரீ சாய்நாதருக்கு தட்சணையாக செலுத்தி, உங்கள் பிரார்த் தனைகளை அவருடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்யுங்கள். அப்படிச் செய்வதினால் பாராயணம் செய்த பலனை நீங்கள் உடனுக்குடன் பெறுவீர்கள் என்பது நிச்சயம்.

இந்த ஸ்துதியை ஆத்மப்பூர்வமாக மனமொன்றி படிப்பவர்களின் வாழ்வில் எதிர்பார்த்திராத திருப்பங்களையும், அற்புதங்களையும் பாபா நிகழ்த்துவார் என்பது அனுபவப்பூர்வமான உண்மை என்பதை சாய் பக்தர்களாகிய நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்பதுவும் நிச்சயம்.

எங்களது மரியாதைக்குரிய குரு ஸ்ரீராம் அவர்களின் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

NEW ERA GARMENTS

AGASTIN,

No: 94,

VENKATESWARA NAGAR,

SALAMANGALAM

VILLAGE, PADAPPAI.

Cell: 8098066667





5 ஆம் ஆண்டுவிழா காணும் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

NEW FASHION DESIGNER

Tailoring For Ladies



Prop: Yasmin Sri

Old no: 116/2,New no: 228.
Palani Andavar Kovil Street,
Ayanavaram, Chennai -23. Cell: 9344786964.



எங்கள் குருஜி ஸ்ரீராம் அவர்களின் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழின் 5 ஆம் ஆண்டு விழாவிற்கு எங்களது அந்தியூர் ஸ்ரீ ஆனந்த சீரடி சாய்பாபா ஆலயத்தின் சார்பாகவும், எங்களது குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 10 அன்னதானம் ஆரம்பித்தது

அப்போது அவ்வளவுதானா, புறப்பட்டாச்சா, என்று ஒரு குரல் குருவை நோக்கி வந்திருக்கின்றது. சட்டென்று திரும்பிப் பார்க்க, அங்கே முதன்முதலில் இடம், பொருள் அனைத்தும் கொடுத்து அன்னதானம் செய்யச் சொன்னாரே ஒரு தொழில் அதிபர், அவர் நின்றிருக்கின்றார்.

அவருக்கு வணக்கம் செலுத்திய குரு, என்ன இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்க, நமது கடை எதிரில்தான் இருக் கின்றது என்று கூறிவிட்டு அதுசரி, நீங்கள் என்ன பாத்திர கடையையே பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள் என்று கேட்க, அதற்கு குரு அவர்கள் அன்னதானம் செய்வதற்காக, அடுப்பு, பாத்திரங்கள், வாங்கலாம் என்று வந்தேன். என்று கூறியிருக்கின்றார்.

வாங்கிவிட்டீர்களா? என்று அவர் கேட்க குரு தயக்கத்துடன், இல்லை என்று கூற, அதற்கு அந்த தொழிலதிபர், குருவின் பொருளாதார நிலையினைப் புரிந்து கொண்டு, ஏன் தயங்குகிறீர்கள். ஒரு வருடத்திற்கு முன்பே உங்களுக்கு அன்னதானம் செய்வதற்குண்டான எல்லா வசதி யும் செய்து தருகிறேன் என்று கூறி னேன். நீங்கள்தான் அப்போதும் தயங்கினீர்கள். இப்போதாவது கூறுங்கள். என்ன பாத்திரங்கள் வேண்டும். என்னிடம் காட்டுங்கள்



என்றவாறே கடைக்குள் கூட்டிச் சென்று அன்னதானம் செய்வதற் குண்டான பாத்திரங்கள், அடுப்பு அனைத்தையும் அவரே வாங்கிக் கொடுத்து, அனுப்பிவைத்திருக்கின்றார்.

குருவிற்கோ, என்ன சொல்வதென்று தெரியவில்லை. விசாரித்து விட்டுவரலாம் என்று தான் வந்தேன் ஆனால் இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எல்லாம் பாபாவின் செயல். மிக்க நன்றி என்று கூறிவிட்டு பேரூந்தில் ஏறி வீடு திரும்பும் பொழுது பாத்திரங்களும், அடுப்பும், வந்துவிட்டது. எரிவாயுவிற்கு என்ன செய்வது என்றவாறே சிந்தித்துக் கொண்டே பேரூந்தை விட்டு இறங்கி நடந்து வரும் வழியில்

எங்களது மையத்திற்கு வரும் சகோதரி திருமதி. யாஸ்மின் ஸ்ரீதர் அவர்கள் குருவைப் பார்த்திருக்கின்றார்.

அவர் எங்கே நடந்து செல்கின்றீர்கள் என்று கேட்க, குரு விபரம் சொல்ல, அவரோ, அப்படியானால் இந்த வாரம் வியாழக்கிழமை அன்னதானம் ஆரம்பிக்கப் போகின்றோமா என்று வியந்தவர். அடுப்பு, பாத்திரங்கள் தயார். எரிவாயுவிற்கு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று அவரே கேட்க, குருவோ அதற்குத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூற, உடனே சகோதரி யாஸ்மின், என்னிடம் ஒரு சிலிண்டர் இருக்கின்றது நான் அதை அன்னதானத்திற்கு தருகிறேன் என்று கூற ஒருவழியாக எரிபொருள் பிரச்சனையும் தீர்ந்தது.

வியாழன் அன்னதானம் ஆரம் பிக்கப் போகிறோம் என்றதும் மையத் திற்கு வரும் சகோதர சகோதரிகள் அனைவரும் அன்னதான உண்டி யலில் காணிக்கையிட அந்த வார மளிகைக்கும், காய்கறிகளுக்கும், காணிக்கை சேர்ந்தது.

வியாழன் அன்று காலையில் குருவே கடைக்குச்சென்று காய்கறிகள், மளிகை பொருட்களை வாங்கிவந்து சுத்தம் செய்து வெட்டி வைத்துவிட, காலையில் பத்து மணிக்கு சகோதரிகள், லதா, புவனா,யாஸ்மின், ரம்யா, ஆகி யோர் வந்து உணவு சமைக்கத் தயார் ஆனார்கள்.அன்னதானத்திற்கு உதவிய தொழில் அதிபர் திரு. ஹரி கிருஷ்ணன் அவர்களும் சரியான நேரத்தில் வந்து அன்னதானத்தை துவங்கி வைக்க, குரு அவர்கள் அடுப்பை பற்ற வைத்து சமையலை துவக்கினார்கள்.

சகோதரிகளின் உதவியோடு சமையலை மிகச்சிறப்பாக முடித்து



பொட்டலமிட்டு கணக்கிட்டுப் பார்த்தால் மிகச் சரியாக 108 பொட்ட லங்கள் இருந்தது. அதை நாங்கள் பாபாவின் ஆசியாக எடுத்துக் கொண்டோம்.

பாபாவின் கருணை எப்படிப்பட் டது என்றால், உலகம் முழுவதும் பெரும் தொற்று ஏற்பட்டு மனித இனமே முடங்கிக்கிடந்த கடந்த இரண்டு ஆண்டுகளிலும், எங்க ளது சாய் தியானாலயாவில் பிரார்த் தனை மையத்தில் தடங்கல் இன்றி அன்னதானம் தொடர்ந்து நடைபெற்றது.

அதிலும் கடந்த இரண்டு ஆண்டுகள் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் மையத்திற்கு பக்தர்கள் வருகை தராத போதும், சமையல் வேலைகளையும் நமது குரு அவர்களே தான் ஒருவரா கவே செய்து, எங்களது, இரு குழந்தைகளின் உதவியோடு பொட்ட லமிட்டு, தான் ஒருவராகவே அன்னம் தேவைப்படுவோருக்கு தேடிச்சென்று உணவளித்து வந்தார்.

பொது முடக்க காலங்களில், குரு விற்கு வேண்டிய நபர்கள், வெளியில் சென்று உணவளிக்காதீர்கள். உங்களுக்கும் தொற்று ஏற்பட்டுவிடும் என்ற கூறியும் கூட, குரு அவர்கள்,



இது பாபாவின் பணி, என்ன நிகழ்ந்தாலும் பாபா பார்த்துக் கொள்வார் என்று தனக்கு இரண்டு முறை தொற்று ஏற்பட்ட போதிலும், அன்னதானத்தை தொடர்ந்து பாபாவின் ஆசியோடு செய்து வந்தார்.

அந்த காலகட்டங்களில் நாடு முழுவதும் பொருளாதார தட்டுப்பாடு இருந்த போதிலும் குரு அவர்களால் தொடர்ந்து எப்படி அன்னதானம் செய்ய முடிந்தது தெரியுமா? அதற்கும் நமது பகவான் சாயி தகுந்த ஏற்பாடுகளை நமது குருவிற்கு செய்து கொடுத்தார்.

நமது மையத்தின் சார்பாக வருடத்திற்கு ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் சீரடிக்கு புனித யாத்திரை செல்வது வழக்கம். அதன்படி அந்த வருடத்தில் ஜூன் மாதத்திற்கான புனித யாத்திரை அறிவிக்கப்பட்டு, முன்பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுமார் 40 பக்தர்கள் சீரடிக்குச் செல்வதற்காக முன் பணம் செலுத்தியிருந்த நிலையில் அவ்வருடம் மார்ச் மாதத்தில் இந்தியாவில் பெரும் தொற்று ஏற்பட்டு பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது.

வேறுவழியில்லாமல், சீரடி புனித யாத்திரை தள்ளிவைக்கப்பட்டு, முன்பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு அனைவருக்கும் தகவல் அனுப்பினார் குரு அவர்கள். ஆனால் நடந்தது வேறு. சொல்லி வைத்தாற்போல அனைவரும் நாங்கள் பாபாவைப் பார்ப்பதற்காக சேமித்த தொகை அது. அது எங்களுக்கு இப்போது வேண்டாம். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எப்போது சீரடிக்குச் செல்கின்றீர்களோ அப்போது கூட்டிச்செல்லுங்கள். என்று கூறி விட்டார்கள்.

நமது குருவோ, என்னிடம் பொது முடக்கம் காரணமாக பக்தர்கள் யாரும் மையத்திற்கு வரப்போவதில்லை. அன்னதானத்திற்கும் காணிக்கை கிடைக்காது. எல்லோரும் பணம் கஷ்டம் இருப்பதால் யாரிடமும் நாம் கேட்ட முடியாது. அதனால் சாயியியே இப்படி ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றார். எனவே நாம் எதைப் பற்றியும் யோசிக்காமல் இந்தத் தொகையை வைத்து அன்ன தானத்தை தொடர்வோம். இவ்வளவு ஏற்பாடுகளை செய்யும் சாயி, சீரடிக்கு செல்வதற்கும் பின்னால் ஏற்பாடு செய்ய மாட்டாரா என்ன? என்றார்.

அந்த நம்பிக்கையே, இரண்டாண்டுகள் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றதற்கும்,எந்த வித வருமானமும் இல்லாத எங்களது தனிப்பட்ட வாழக்கை ஓடுவதற்கும், பொது முடக்கம் நீங்கியபின், முன்பணம் செலுத்தியிருந்த 40 நபர்களும், எந்த வித தடங்கல்களும், பொருளாதார சிக்கல்கள் இன்றி, சீரடி புனிதப் பயணம் சென்று வந்ததற்கும் காரணமாகும்.

நம்பிக்கை, பொறுமை என்ற

சாயிநாதரின் தாரக மந்திரத்தை முழுமையாக பின்பற்றுபவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு குறையும் வராமல் சாயி பாதுகாப்பார் என்பது கண்கண்ட உண்மையாகும்.

அன்னதானம் ஆரம்பித்ததில் இருந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக எங்களது சாய் தியானாலயா பிராரத்தனை மையத்தின் சார்பாக தொடர்ந்து அன்னதானம் நிற்காமல் நடைபெற்றுக் கொண்டிருப்பது பகவான் சாயிநாதரின் கருணையினால்தான் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

எந்தவித வைப்புத் தொகையும் இன்றி ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைக்குள் கிடைக்கும் தொகையை வைத்தே வியாழன் அன்னதானம் நடைபெறுகின்றது என்பதே உண்மை. அதற்கு ஒவ்வொரு புதன் கிழமையும் எங்கள் மையத்தில் பகவான் சாயி லீலைகளை நடத்திக் கொண்டிருப்பது தனிக்கதை.

அதில் ஒன்றை மட்டும் கூறுகின்றேன். எப்போதும் புதன் கிழமை மாலைக்குள் அன்னதானத்திற்கு எப்படியும் யார் மூலமாவது தேவையான தொகை வந்து விடும். ஒரு புதன்கிழமை மாலை ஐந்து மணி. அன்னதானத்திற்கு தேவையான அட்டவணையை போட்டு விட்டு அன்னதான உண்டியலை எண்ணிப்பார்த்தால் இரண்டாயிரம் தேறுகிறது. மூன்றாயிரத்திற்கு இன்னும் ஆயிரம் தேவை. மணி ஆறு ஆகிவிட்டது. குருவிற்கோ இருப்பு கொள்ளவில்லை.

ஏனெனில், இரவிற்குள் மளிகை, காய்கறிகள் வாங்கினால்தான் காலையில் சீக்கிரமாக சமயலை முடித்து 11 மணிக்குள் விநியோகிக்க முடியும். எனவே வீட்டில் இருக்கும் அனைவரிடமும் ஆயிரம் ருபாய் இருக்குமா என கேட்டுவிட்டார். யாரிடமும் இல்லை.

நெருங்கிய நண்பர்களிடமும் கேட்டுவிட்டார்.அனைவரும் நாளை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்களே அன்றி ஒருவரிடமிருந்தும் பணம் கிடைக்கவில்லை. மணி. ஆறு முப்பது. குருவிற்கு ஒரு கால் வருகின்றது. எதிர் முனையில் ஓர் வயதான பெரியவர். அய்யா நான் வில்லிவாக்கத்தில் இருக்கின்றேன். உங்களை சந்திக்கவேண்டும். உங்கள்



மையத்திற்கு எப்படி வரவேண்டும் என்று வழி கேட்க, குருவும் வழியை கூறி, சீக்கிரம் வாருங்கள் நான் வெளியே செல்ல வேண்டும். என்று கூறிவிட்டு, காத்திருந்தார்.

நேரம் போனதே தவிர, போன் செய்தவரையும் காணோம், பணமும் கிடைக்கவில்லை. மணி ஏழு. மீண்டும் கால் செய்த அந்தப் பெரியவர் நான் புறப்பட்டு வந்து கொண்டு இருக்கின்றேன், பத்து நிமிடத்தில் வந்துவிடுவேன் என்றிருக்கின்றார்.



குருவும் அமைதியாக அமர்ந்துவிட்டார். சரியாக 7.10 க்கு மையத்திற்கு ஆட்டோ ஒன்று வந்து நின்றது. ஆட்டோவில் இருந்து வயதான பெரியவர் ஒருவர் இறங்கினார். வயது எண்பதிற்கு மேல் இருக்கும். கூன் விழுந்து குனிந்தபடி இருந்தார். படிகளில் வேகமாக ஏறி உள்ளே வந்தார். உள்ளே வந்தவரை சாய்ராம் என்று வரவேற்று நாற்காலியைக் காட்டி உட்காருங்கள் என்றார் குரு. நீங்கள் உட்காருங்கள். எனக்கு நேரமில்லை. வேலை இருக்கின்றது என்றார்.

அவரது கைகளில் நமது சாயி மகராஜ் குருவை தேடி இதழ் இருந்தது. அதை குருவிடம் நீட்டி, இது உங்க புத்தகம் தானே என்றார். ஆமாம் சாய்ராம் என்ற குருவிடம், பையில் இருந்து இரண்டு ஐந்நூரு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, இந்தாங்க, இதிலே ஆயிரம் ரூபாய் இருக்கு அன்னதானத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று நீட்ட, குருவிற்கோ ஆனந்த அதிர்ச்சி. ரூபாய் நோட்டை கையில் வாங்கிக்கொண்டு பெயர் சொல்லுங்க சாய்ராம் என்றார் குரு.

போட்டுக்கோங்கோ, வில்லிவாக்கம் சாந்தின்னு போட்டுக்கோங்கோ, என் வீட்டுக்காரம்மா பேரு. என்றவாறே, இந்த புத்தகத்திலே போட்டிருக்கற பொருட்கள் எல்லாம் நீங்க தயார் பன்றதா என்றார். ஆமாம் சாய்ராம் என்றார் குரு. எல்லாத்திலேயும் ஒன்னொன்னு எடுத்து வைச்சு எவ்வளவுன்னு சொல்லுங்கோ என்றார். குருவும் அவர் கூறியபடி பொருட்களை எடுத்து வைத்து பில் போட்டார். பில் சரியாக 2000 வந்தது.

உடனே அந்த பெரியவர் தன் சட்டைப் பையில் இருந்து 2000 த்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, பொருட்களை அப்படியே வாரி தான் வைத்திருந்த பையினில் போட்டார். குருவோ இருங்கள் சாய்ராம் நான் பார்சல் பண்ணி தருகின்றேன் என்றவாறே என்னை நோக்கி பெட்டி ஒன்று எடுத்துவாப்பா என்று கூற நான் அறைக்குச் சென்று பெட்டியை தேட, என்னப்பா என்றவாறே குருவும் அறைக்கு வந்து ஓர் பெட்டியை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தால் பெரியவரைக் காணோம்.

கையில் இருந்த பெட்டியை கீழே போட்டுவிட்டு குரு படிகளில் இறங்கி வாசலுக்கு ஓடுகிறார். வாசலில் ஆட்டோவையும் காணோம். பெரியவரையும் காணோம். தெரு முனைவரை தேடுகிறார். ஒருவரையும் காணவில்லை. ஆட்டோ புறப்பட்ட சத்தமே கேட்கவில்லை. நாங்கள் அறைக்குள் சென்று வந்த நேரம் பத்து விநாடிகள்கூட இருக்காது. அதற்குள் எப்படி மறைந்தார்.

சாயிநாதா, கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே! உன்னையல்லால் இந்த லீலைகளின் தலைவன் வேறு யாராக இருக்க முடியும்.

– லீலைகள் தொடரும்...

5 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் "சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது இதயங்கனிந்த இனிய, எளிய வாழ்த்துக்கள். மேன்மேலும் பல ஆண்டு தாண்டி சாயி சேவையில் பாபாவின் அருளோடும், ஆசியோடும் பல சாதனைகளை புரிய வாழ்த்துகிறோம்.



"பிரார்த்தனை செம்மல்"
த.சாய் கலியன்
மற்றும் குடும்பத்தார்.
மகேந்திரபுரி, சேலம்.
செல்: 9962193311,
9092242598.

எங்கள் குருஜி ஸ்ரீராம் அவர்களின் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது வாழ்த்துக்களும், வணங்குதலும்...



அன்புடன்:

S.M.S. உமேஷ்,

15.15.1B. ஸ்ரீ ஷிர்டி சாய் பேன்ஸி ஸ்டோர்
சௌந்தரம் காம்ப்ளக்ஸ், மாரியம்மன் கோவில் தெரு
நிலக்கோட்டை624208, திண்டுக்கல் மாவட்டம்
போன்: 9952730818.

ஆதவன் அசோசியேட்ஸ்
நிலக்கோட்டை - கொடைக்கானல்

ஸ்ரீ ஜனனி பேஷன்ஸ்
கொடைக்கானல்.

தொடர் –49

குருவைத் தேடி

சற்குருவை உன் பிள்ளை உனக்கு அடையாளம் காட்டுவாள் என்று எழுதியிருந்தது.

சற்குருவை என் பிள்ளை எனக்கு அடையாளம் காட்டுவாள். அப்படி என்றாள் எங்களுக்கு பெண் பிள்ளைதான் பிறக்க இருக்கின்றாள். என்பதை அறிந்து கொண்டேன். இருப்பினும் சராசரியான மனித பிறவியான நான், ஒரு பெண் பிள்ளை எப்படி சற்குருவை அடையாளம் காட்டு வாள் என்ற சந்தேகத்தில் இருந்தேன்.

2002 ஆம் ஆண்டு ஓர் நாள் அதிகாலையில் என் மனைவி ஓர் கனவு கண்டதாக என்னிடம் பின்வருமாறு கூறினாள். எனது மனைவியும், நானும் ஓர் அடர்ந்த காட்டிற்குள் செல்கின்றோம். அங்கே ஓர் வேப்பமரத்தடியில் தலையை வெள்ளை துணியால் மூடியபடி, நீள அங்கி அணிந்த வயதான பெரியவர் ஒருவர் கால்மீல் கால் போட்டபடி அமர்ந்திருப்பதாகவும், நாங்கள் இருவரும் அவரை விழுந்து வணங்குவதாகவும், அவர் எங்களை ஆசீர்வதிப்பதாகவும், அத்துடன் கனவு முடிந்துவிட்டதாகவும் கூறினார்.

ஆனால் அவரின் முகம் மிகவும் ஒளி பொருந்தியதாக இருந்ததாகவும், அந்த முகத்தை என்னால் மறக்க முடியவில்லை எனவும் கூறினார். மேலும் அவர் யாராக இருக்கும் என்று என்னிடம் கேட்க, நான் கனவுகளுக்கு



பெரிதாக முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன் என்பதால், நீ கூறும் உருவ ஒற்றுமை வட மாநிலத்தில் உள்ள மகான் சாயிபாபாவை ஒத்திருப்பது போல் தெரிகின்றது. ஆனால் அவரைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்று கூறிவிட்டு அத்துடன் நான் அதை மறந்து போனேன்.

அடுத்த மூன்றாவது நாள் எனது நண்பர் பாண்டியன் என்பவர் அவசர மாக ஊருக்குச் செல்வதால் நூலகத்தில் எடுத்த புத்தகத்தை மாற்றமுடியவில்லை. எனவே நீங்கள் நூலகம் செல்லும் போது இந்த புத்தகத்தையும் மாற்றி வையுங்கள் என்று என்னிடம் ஒரு புத்தகத்தை கவரில் போட்டு

கொடுத்துவிட்டுப் போனார்.

நான் அந்த புத்தகத்தை வீட்டில் வைத்துவிட்டு மறந்து விட்டேன். வீட்டில் இருந்த என் மனைவி பொழுது போகாமல் அந்தப் புத்த கத்தை படிக்கலாமே என்றவாறே கவரில் இருந்து எடுத்திருக்கின்றார். புத்தகத்தைப் பார்த்த என் மனைவி வியந்து போயிருக்கின்றார். ஏன் என்றால் அவர் கனவில் கண்ட அதே மகானின் உருவம் அந்தப் புத்தகத்தின் அட்டைப்படத்தில் இருந்திருக்கின்றது.

அது சீரடி சாய்பாபா வரலாறு என்ற புத்தகம்.

அதை என்னிடம் கூறி மிகவும் ஆச்சர்யப்பட்டார்கள். நான் அதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதுமட்டும் அல்ல, அடுத்தவாரமே பிரபலமான தொலைக்காட்சி ஒன்றில் இராமானந்த சாகர் என்பவர் ஹிந்தி மொழியில் தயாரித்த சீரடி சாய்பாபா என்ற நெடுந்தொடர் ஒளிபரப்பாகத் தொடங்கியது. அப்போதும் என்னை அது பெரிதாகக் கவரவில்லை.

காலம் கனிந்தது. எங்களுக்கு அமிர்தா என்ற பெண்குழந்தை பிறந்தாள். அவளுக்கு ஒரு வயது இருக்கும் பொழுது எங்கள் வீட்டிற்கு எதிரில் மல்லிகை மகால் என்ற திருமண மண்டபம் இருந்தது. அதிக மாக அங்கு ஆன்மீக நிகழ்ச்சிகளே நடக்கும். நிகழ்சிகள் ஏதும் இல்லாத நாட்களில் தெருவில் இருக்கும் குழந்தைகள் அனைவரும் அங்கேதான் விளையாடுவார்கள்.

மண்டபத்து காவல்காரர் அனைத்து குழந்தைகளையும் அன்போடு பார்த்துக் கொள்வார். சமீபத்தில் அங்கே புட்டபர்த்தி பாபாவின் பிறந்தநாள் வைபவம் நடந்து முடிந்திருந்தது. நிகழ்ச்சி முடிந்து மண்டபத்தை காலி செய்து போகும் போது சில பிரசாத பைகளை அங்கேயே விட்டுச் சென்றுள்ளனர் நிகழ்ச்சி அமைப்பாளர்கள்.

குழந்தைகள் விளையாடிவிட்டு வீடு திரும்பும் பொழுது, காவல்கார தாத்தா குழந்தைகளுக்கு ஆளுக் கொரு பிரசாதப் பைகளை கொடுத்து அனுப்பியிருக்கின்றார். குழந்தை அமிர்தா பிரசாத பையை தூக்கிக்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்து தாத்தா, தாத்தா என்றாள்.

நான் பையை வாங்கிப் பிரித்துப் பார்த்தபோது அதில் லட்டு ஒன்றும், மெழுகுவர்த்தி பெட்டி ஒன்றும், புட்டபர்த்தி பாபாவின் புத்தகம் ஒன்று இருக்கவே, பிரசாத லட்டை நானும், குழந்தையும் சாப்பிட்டுவிட்டு, மெழுகுவர்த்தி பெட்டியை அலமாரியில் வைத்துவிட்டேன்.

ஒருவாரத்தில் கார்த்திகை தீபம் வந்தது. அந்த காலம் எங்களது வாழ்வில் மிகவும் கஷ்டமான காலம். தீபம் ஏற்றுவது என்பது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால் அன்று விளக்கும், எண்ணையும் வாங்கக்கூட பொருளாதாரம் எங்களிடம் இல்லை. மன வருத்தத்துடன் இருந்த என்னை, என் மனைவி நான் அலமாரியில் வைத்த மெழுகுவர்த்தி பெட்டியை ஞாபகப்படுத்தி மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கும்படி கூறினார்.

நானும் ஆர்வமாய் பெட்டியை எடுத்துப் பிரித்துப் பார்த்தால் அதில் மெழுகுவர்த்தி இல்லை. அதற்குப் பதில் ஒரு சிறிய சிலை ஒன்று இருந்தது. எனக்கும் மேலும் வருத்தமாகிப்போனது. அந்த சிலையை வெளியே எடுத்துப் பார்க்காமலே என்



மனைவியின் கைகளில் திணித்துவிட்டு, மவுனமாக இருந்து விட்டேன்.

பெட்டியை வாங்கிய என் மனைவி உள்ளே இருந்த சிலையைப் பார்த்ததும் ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டே வந்து அந்த சிலையை என்னிடம் காட்டி ஆனந்தத்தில் கண்ணீர் விட்டு அழுதாள். இதோ பாருங்கள். முதலில் கனவில் வந்தார், பிறகு புத்தகத்தில் வந்தார், இப்போது சிலை ரூபத்தில் வந்திருக்கின்றார். இவரைப் பற்றி நாம் முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும். நூலகத்தில் இவரைப் பற்றி வேறு ஏதாவது நூல்கள் இருந்தால் எடுத்துவாருங்கள் என்றார்.

அதிலிருந்து என் மனைவிக்காக பாபாவைப் பற்றிய செய்திகள், புத்தகங்களை தேடத் தொடங்கினேனே தவிர எனக்கொன்றும் பாபாவின் மேல் ஆர்வம் ஏற்படவில்லை. ஆனால் என் மனம் முன்னைவிட தீவிரமாக சற்குருவை தேடத்தொடங்கியது.

எனக்குண்டான சற்குருவை, உன் பிள்ளை உனக்குக் காட்டு வாள் என்று இயற்கை எனக்கு விளக்கமாக தெரிவித்தும், என் சற்குரு என்னை நோக்கி வந்தும், என்னால் அவரை உணரமுடியாமல், நான் மேலும் முன்னைவிட தீவிரமாக சற்குருவை தேடுகின்றேன். என்னே காலத்தின் விந்தை.

காரணம், அறியாமை மட்டுமே! ஆம் ஒருவன் எவ்வளவு அறிவாளியாயினும் காலம் அவனை சற்குருவிடம் சேர்ப்பதற்கு சகல விதத்திலும் சோதிக்கும். அதில் ஒன்று அறியாமை என்ற நோய் எல்லா விதத்திலும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இவ்விசயத்தில் எனது அறியாமை என்னவென்றால், எனது சற்குரு உடலுடன் இருப்பார் என்ற அறியாமை ஏனெனில், நான் இதுவரை சந்தித்த குருமார்கள் அனைவரும் உடலுடன் எனக்கு அறிமுகமானவர்களே! ஆகையால் என் மனம் சற்குருவையும் அவ்விதமே தேடியது.

அதில் எனக்கு தனிப்பட்ட வகையில் ஓர் பெருத்த ஆனந்தம். எனது சற்குரு எனது மகள் மூலமாக என்னிடம் வந்தும், தொடர்ந்து அடுத்த ஆறு ஆண்டுகள் அவரின் மேற்பார்வையில் நான் அவரை உணராமலேயே எனக்கு பயிற்சி அளித்த பாக்கியம் எனக்கு கிட்டியது. அது ஆறு ஆண்டுகளுக்குப் பின்பே என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதைத்தான் இனி நீங்கள் படிக்கப் போகின்றீர்கள்.

பயிற்சி என்றால் சாதாரணப்

பயிற்சியா என்ன? ஆசை, அகங்காரம், பொருளாசை, மண்ணாசை, அறியாமை, நிலையாமை, முயலாமை அனைத்தையும் உணர வைப்பதற்காக, எங்கோ ஒரு சிறிய நகரத்தில் வசித்து வந்த என்னை, தமிழ்நாட்டின் தலைநகருக்கு வரவைத்து அடித்து துவைத்த பயிற்சி அல்லவா அது.

"ஒருவன் என்னை அறியும் முன்பாகவே நான் அவனிடம் வந்து விடுகிறேன்" என்ற சாயி நாதனின் அமிர்த மொழி எனக்கு அப்போது விளங்கவில்லை. இருப்பினும் எனது மனைவியின் மனம் நாளுக்கு நாள் சாயி பாபாவிடம் பக்தி செலுத்தத் தொடங்கியிருந்தது. அவர் என்னிடம் பாபாவைப்பற்றி பேசும் பொழுது எல்லாம் ஏனோ என் மனம் அதை கவனியாமலே இருந்தது.

பாபா சீரடி என்ற ஊரில் அறுபது ஆண்டுகாலம் வாழ்ந்து அங்கேயே சமாதி ஆனாராமே! அந்த ஊர் எங்கிருக்கின்றது என்று கேட்பார் என் மனைவி, அது எங்கோ வடநாட்டில் இருக்கிறது. அதெல்லாம் எனக்கெப்படிப்பா தெரியும் என்று அலுத்துக் கொள்வேன். எனது அறிவு தமிழ்நாட்டு மகான்கள், தமிழ் சித்தர்கள், தமிழ் என்ற அளவோடு கட்டுப்பட்டிருந்தது. தவிர வடநாடு என்றால் வேற்று மொழி, வேற்று கலாச்சாரம் என்ற துவேசம் என்னுள் திணிக்கப்பட்டிருந்தது.

மேலும், தொலைக்காட்சியில் தொடர்ந்து பாபா தொடரை பார்த்து, பார்த்து என்னிடம் பாபா வின் கதைகளை கூறிவந்தார் என் மனைவி. தவிர எங்கள் மகளும் தொலைக்காட்சியில் பாபா வேடமிட்டு வருபவரை கண்டதும் தாத்தா, தாத்தா



என்று அழைக்க ஆரம்பித்தாள். ஆனால் நான் அது அவர்கள் விருப்பம் என்றவாறு பாபாவை கண்டும் காணாமல் இருந்து வந்தேன்.

"உன் மரணத்தின் பொருட்டு நீ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் உனது கால்களில் கயிற்றைக் கட்டி சிட்டுக் குருவியை இழுப்பது போல் இழுத்துக் கொள்வேன்" என்ற பகவான் சாயிநாதரின் வரிகளுக்கிணங்க, என் கால்களில் கயிறு கட்டப்பட்டது.

ஆம், எனது வாழ்க்கையில் சாயியின் லீலா விநோதங்கள் நிகழ ஆரம்பித்தது.

எங்களது குழந்தை அமிர்தா பிறந்து ஒரு வருடத்தில் எனது வியாபாரம் நலிவடைந்து பொருளாதாரக் கஷ்டம் எம்மை வெகுவாக பாதித்தது. மிகவும் சிரமப்பட்டு காலம் தள்ள வேண்டியிருந்தது. அந்த கால கட்டத்தை மேலும் சிரமமாக்கி என்னை அவரை நோக்கி இழுக்க சற்குரு சாயி திருவருள் கொண்டார்.

- (தொடரும்...)

குருஜி ஸ்ரீராம் சாயி அவர்களின்
"சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக
மாத இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க
விழாவிற்கு எங்களது வாழ்த்துக்கள்.



உங்களது
கொடைக்கானல்
பயணம் இனிதாகவும்,
எளிதாகவும் அமைய
எங்களை தொடர்பு
கொள்ளுங்கள்.

கொடைரோடு to கொடைக்கானல் தினசரி சர்வீஸ், மற்றும் சுற்றுலா பேக்கேஜ்.

V.அசோக்குமார், ஸ்ரீ சாய் ஹரி டிராவல்ஸ்,
கொடைரோடு, போன்: 9751769418.

எங்களது மரியாதைக்குரிய குரு ஸ்ரீராம் அவர்களின்
"சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத
இதழின் 5 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது
இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

TRUE LINK HR MAN POWER SERVICE

CORPORATE STAFFING / TEMPORARY STAFFING / PAYROLL MANAGEMENT/ TRAINING & DEVELOPMENT / COMPLIANCE CONSULTING / SECURITY SERVICE / CONSTRUCTION / REAL ESTATE & INTERIOR WORK.



P.S.B.A BOXING FITNESS CENTRE

126, SANJAI GANDHI NAGAR, 2ND ST,
CHROMEPET, CHENNAI. 117

Cell: 9042034560

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –13

சாய் சரவணன்

"அதி தேவதை"

சுந்தராபாயி சீரடிக்கு புறப்படத் தயாராகி பிக்குபாயை அருகே அழைத்து இவ்வாறு கூறினாள். பிக்கு பெரியப்பா கூறியதைப் போல, விட்டலனின் விருப்பத்திற்கிணங்க நான் சீரடியில் வாழும் குருவைத் தேடிச் செல்கின்றேன். சாயிபாபா என்ற குருவினுள் விட்டலனை நான் தரிசனம் செய்தால் அங்கேயே தங்கி குருசரண சேவையை தொடர்வேன். இல்லை என்றால் உடனடியாக பண்டரிபுரம் திரும்புவேன்.

நான் செல்வதை நினைத்து நீ கவலைப்படாதே! பகவானின் சங்கல்பம் எதுவோ அதுவே நடந்தேறும். எனக்கூறி சக்குபாயை தேற்றினாள். பின்பு ஒரு விரிப்பு, ஏக்தார் என்ற இசைகருவி, ஏக்நாத் பாகவதம், சிப்லாக்கட்டை, ஒரு ஜோல்னாபை, ஒரு கிருஷ்ண விக்கிரகம். இவை மட்டுமே எடுத்துக்கொண்டு, விட்டலனின் திருவடியை வணங்கிவிட்டு, பிக்குபாயிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு புகைவண்டியின் மூலம் கோபர்கான் இரயில் நிலையம் வந்தடைந்தாள்.

இரயிலில் இருந்து இறங்கிய சுந்தரா பாயி அங்கும் இங்கும் நானாவை தேடினாள். எங்குமே நானா தென்படாததால் தனது உடமைகளுடன் சுந்தராபாயி இரயில் நிலையத்தில் இருந்து வெளியே வரவும், அவளின் அருகே ஒரு சிறுவன் வந்து நின்று நீங்கள் தான் சுந்தராபாயா, நீங்கள் பண்டரிபுரத்தில் இருந்ததானே வருகின்றீர்கள் என்று கேட்டான்.

ஆமாம், நீ யாரப்பா என்றாள் சந்தரா பாயி, என் பெயர் கிஷண். நானா தாத்தா உங்களது அடையாளத்தைக்கூறி, உங்களை அழைத்துவருமாறு கூறினார். வண்டி வெளியில் காத்திருக்கின்றது வாருங்கள் போகலாம் என்றான் கிஷண்.

அதுசரி, நானா பெரியப்பா எங்கே யிருக்கின்றார் என்றாள் சுந்தராபாயி, அவர் பாபா உடன் இருக்கின்றார். நீங்கள் வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள் நாம் விரைவாகச் சென்று பாபாவையும், நானாவையும் சந்திக்கலாம் என்றான் கிஷண். சுந்யராபாயி வண்டியில் ஏறி அமர்ந்தாள். வண்டி புறப்பட்டதும் கிஷண், அக்கா சீரடிக்கு இப்போதுதான் வருகின்றீர்களா? என்று கேட்க, சுந்தரா பாயி சிறு புன்னகையுடன், ஆமாம், இப்போது தான் முதன்முதலாக வருகின்றேன் என்றாள்.

ஓ! அப்படியா, அப்படியானால் நான் பாபாவைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள் என்ற கிஷண், தங்களுடன் பாபா கோலி விளையாடியதில் இருந்து, சிறுவர்களுக்கு தனது ஜோல்னாப் பையில் இருந்து தின்பண்டங்கள் எடுத்துக் கொடுத்தது வரை கூறியவன், தான் படிப்பில் மந்தமாக இருந்ததால், தனக்கு பாபா பாடம் சொல்லிக்கொடுத்து பள்ளியில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற வைத்தார் என்றும் என்னைப் பொறுத்தவரை பாபா, ஒரு சக்தி வாய்ந்த மகான் என்று கூறுவேன் என்றான்.

கிஷண்,பாபாவைப்பற்றி கூறுவதை எல்லாம் சுந்தராபாய் காதால் கேட்டு மனதில் சித்தரித்துக்கொண்டே வந்தாள். பேசிக்கொண்டே வந்ததில் கோதவரி நதி வந்துவிட்டது. கிஷண், அக்கா இதோ கோதாவரி வந்துவிட்டது என்

றான்.சுந்தராபாயி கோதாவரி நதியின் அழகை ரசித்துக் கொண்டே, சரி கிஷண், நான் குளித்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு, கோதாவரியில் ஆனந்தமாக குளித்துவிட்டு மீண்டும் வண்டியில் ஏறி சீரடியை நோக்கிப் பயணமானார்கள்.

அதே நேரம் சீரடியில், அந்தி சாயும் நேரம் என்பதால் பாபா மசூதியை தீபங் களால் அலங்கரிக்கத் தொடங்கினார். அங்கிருந்த பிற பக்தர்களும் பாபாவுடன் இணைந்து தீபம் ஏற்றினர். வழக்கத்திற்கு மாறாக பாபா அதிக தீபங்களை ஏற்றி மசூதியை அலங்கரித்தார்.

பாபாவின் முகமோ இன்று அதீத அமைதியாகவும், ஆனந்தமாகவும், யாரையோ எதிர்பார்ப்பது போன்றும் இருந்தது. இன்று பாபாவிற்கு பிடித்தமான பக்தர் யாரோ வருகிறார் போலிருக்கின்றது. பாபா சற்று குதூகலமாக இருப்பது போல் தெரிகின்றதே! என்று பக்தர்கள் ஒருவருக்கொருவர் அவர்களுக்குள் பேசிக்கொண்டனர்.

உண்மைதானே! பாபா காலமெல்லாம் மசூதிமாயி என்று கூறிக்கொண்டிருந்த துவாரகாமாயித் தாயே இன்று நேரில் அல்லவா வரப் போகிறாள். இனி துவார காமாயிக்கு அவள்தான் பொறுப்பு. பின் னால் அமையப் போகும் ஸ்ரீ சாயிநாத சமஸ்தானத்தின் "அதி தேவதை" அல்லவா அவள். அவளை வரவேற்க பாபாவோடு, நானா சாகேப் சாந்தோர்கர், சியாமா, மகல்சாபதி, ஆகியோரும் ஆவலோடு காத்திருந்தனர்.

இரவு ஏழு மணி, கிஷண் சுந்தராபாயை அழைத்துக்கொண்டு வந்த வண்டி சீரடிக் கிராமத்திற்குள் நுழைந்தது. அக்கா இதுதான் எங்கள் சீரடி கிராமம். அதோ, அங்கே இரண்டு கொடிகள் பறக்கின்றதே, அதுதான் எங்கள் சாயிபாபா வாழும் "துவாரகாமாயி" என்றான். "துவாரகாமாயி"



என்ற திருநாமத்தைக் கேட்டவுடனே சுந்தராபாயின் மனம் ஓர் விதமான ஆனந் தத்தை அடைந்தது. சுந்தராபாயி தன் மனதினுள் இங்காவது என் சற்குருவை தரிசிப்பேனா, என் பகவானே விட்டலா என்ற வாறே சீரடி மண்ணை மிதித்தாள்.

மண்ணில் அவதரித்த ஞானிகள் முக்தியை அடைய வேண்டுமானால், சற்குருவின் பாதத்தைப் பற்றிக் கொள்வதே சிறந்த தர்மம் என்கிறார்கள். ஏனெனில் பகவானே சற்குருவாய் வருகிறார்.

சுந்தராபாயின் ஒரே இலக்கு பகவானின் திருவடியை அடைவதே ஆகும். அந்த இலக்கு சற்குருவின் அருளால் தான் நிகழும் என்பதை அறிந்தே அவள் இத்தனை காலம் சற்குருவை தேடும் மார்க்கத்தை கடைபிடித்துவந்தாள். அந்த வகையில் அவள் கடைசியாக சீரடி மண்ணை மிதித்தாள்.

சாயிநாதர் தன் அவதார சங்கல்பத்தை தன் அடியவர்களை வைத்தே நிறைவேற்றிக் கொள்கின்றார். நானா, தாஸ்கணு, பீஷ்மா, போன்றோரை ஆட்கொண்டு பல லீலைகளைப் புரிந்ததைப் போன்று, சுந்தராபாயையும் ஆட்கொண்டு சீரடிக்கு



இழுத்தார்.

சுந்தராபாய் யார்? அவளது தேவை என்ன? அவளது பிறவிப்பயன் யாது? அவள் யோக நிலையில் உயர்ந்த "சித்த யோகினி" என்ற நிலையில் இருப்பவள் என்பதை யாவும் சாயி அறிந்தே இருந்தார். சுந்தராபாயி சீரடி வருவதன் நோக்கம் வரம் கேட்பதற்காகவா? இல்லை. சற்குருவான தன்னையே வரமாய் கேட்கப் போகிறாள் என்பதையும் பாபா அறிந்தே இருந்தார்.

அவளது தீராத இறை தாபத்தை நீக்கி அவள் வாழும் பொழுதே சாந்தியை தந்து தன்னோடு ஐக்கியமாகும் உயர்ந்த நிலையான ஜீவன் முக்தியை தரவே பாபா சுந்தராபாயை சீரடிக்கு இழுத்தார். சுந்தராபாயி சீரடி மண்ணை மிதித்தாள் என்பதை அறிந்து கொண்ட பாபா காத்திருந்த நாள் வந்தது என் ஆனந்தம் அடைந்தார். அவர் மனதில் ஏற்பட்ட ஆனந்த மலர்ச்சிக்கு ஏற்ப அவரது முகமும், அவர் ஏற்றிய தீபங்களும் பிரகாசித்தன.

சாயி துவாரகாமாயி படிக்கட்டில் உட்கார்ந்து மசூதிக்கு வரும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தார். முழுக்க இருள் சூழ்ந்திருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் ஆர்வத்துடன் எட்டிப்பார்க்க ஆரம்பித்தன. முழு பொளர்ணமி ஆனதால் சந்திரனின் குளிர்ச்சி எங்கும் பரவியது. மெல்லிய குளிர் காற்று வீச பக்தர்களின் மனதில் இனம் புரியாத ஆனந்தம் நிரம்பி வழிந்தது.

தூரத்தில் மெல்லிய விளக்கின் ஒளி குதிரை வண்டி வருவதைக் காட்டியது. நானா, அதோ சுந்தராபாயி வந்துவிட்டாள் என்று மெல்ல எழுந்து சுந்தராபாயை வரவேற்க தயாரானார். ஆடி அசைந்து வந்த குதிரை வண்டி மசூதிமுன் நிற்க, கீழே குதித்த கிஷண், அக்கா வாருங்கள் மசூதி வந்துவிட்டது என்று சுந்தராபாயை அழைத்தான்.

மெல்ல திரைச்சீலையை விலக்கிக் கொண்டு, தனது சொற்ப உடமைகளோடு, மார்பினில் கிருஷ்ண விக்கிரகத்தை அணைத்துக் கொண்டு கீழே இறங்கி மசூதியைப் பார்த்தாள்.

துவாரகாமாயி முழுவதும் விளக்குகள் ஏற்றப்பட்டு தேவலோகம் போல் விளக்கொளி வீசிக்கொண்டிருக்க, துவாரகா மாயியின் படிகளில் அடியவர்கள் புடைசூழ நடுவே பாபா அமர்ந்திருக்க, சுந்தராபாயின் கண்களுக்கோ பாபாவிற்குப்பதில் ஒரு பேரொளி தென்பட்டது.

அதை பார்த்த உடனே அவளது தெய்வீக உணர்வு மேலோங்கியது. பேராற்றலான தெய்வீக சக்தி தன்னை சூழ்ந்திருப்பதை நன்கு உணர்ந்தாள். அடியவர்களுக்கு நடுவே தென்பட்ட பேரொளி யார் என்பதை ஒருவாறு ஊகித்தாள். அருகே சென்று அவன்தாள் பணிய உவகை கொண்டாள்.

அதே சமயம், நானா அருகே வந்து, வா, சுந்தராபாயி வா, என்று அழைக்க, அவர் அழைத்ததைக் கூட சரியாக கவனிக்காமல், தெய்வீக மயக்கத்தில் சுந்தராபாயி துவாரகாமாயியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

- (தொடரும்...)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் நாம் தரிசிக்க இருப்பது, சிவத்திரு. சபாபதி சுவாமிகள் என்னும் ஸ்ரீ மத் கள்ளியடி பிரம்மம் சுவாமிகளின் சமாதி தரிசனம்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீ மத் கள்ளியடி பிரம்மம் சுவாமி

மதுரை மாவட்டம் அழகர்கோவில், அருகில் உள்ள பில்லிச்சேரி என்ற கிராமத்தில், 11.8.1874 ஆண்டு, திரு. அழகிய சுந்தரனார், திருமதி. இராமாயி அம்மையார் அவர்களின் தவப்புதல்வனாய் அவதரித்தார்.

இவர் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றதில்லை ஆயினும், தனது 12 வது வயதில், ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை நிறுவி, அவ்வூர் சிறுவர்களுக்கு கல்வி கற்பித்தார்.

தன்னுடைய இளம் வயதிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டவர் இல்லற வாழ்க்கையில் இருக்கப் பிடிக்காமல் வீட்டில் கோபித்துக் கொண்டு ஊர் ஊராக சுற்ற ஆரம்பித்தார். திண்டுக்கல் அருகே வடமதுரை என்னும் ஊரில் சில காலம் தங்கியவர் பின்பு காஞ்சிபுரம் வந்தடைந்தார்.

அங்கு கோனேரி குப்பத்து தெருவில் வசித்து வந்த மெய்ஞான வள்ளலாகிய,





ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு அவருக்கு ஆத்ம சீடரானார்.

பின்னர் குருவின் உத்தரவின்படி வடநாட்டு திருத்தலங்களை தரிசித்து மீண்டும், தமிழ்நாட்டிற்கு வந்து தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் ஸ்ரீலஸ்ரீ மௌன சுவாமிகளை தரிசனம் செய்து அவரின் அன்பு கட்டளையை ஏற்று மீண்டும் வடமதுரையை வந்தடைந்தார்.

அக்கலத்தில் பஞ்சத்தில் சிக்கி வளம் குன்றியிருந்த வடமதுரையில் எங்கு பார்த்தாலும் கள்ளச் செடிகள் ஏராளமாக வளர்ந்து மண்டிக் கிடந்தன. மக்களின் பஞ்சத்தை நீக்கும் பொருட்டு, தன் குருநாதனை மனதினில் நினைத்து கடும் தவம் மேற்கொண்டார்.

தவக்காலத்தின்போது, மழை, புயல், மிருகங்களினால் இவருக்கு ஒரு தொந்தரவும் ஏற்பட்டதில்லை. மழை பெய்தாலும் இவரின் மீது மட்டும் மழை பொழியாது. பாம்பு வந்தாலும் இவரை தீண்டாது ஓரமாகச் செல்லும். இவற்றை எல்லாம் கண்ட மக்கள், இவரின் மகிமைகளை எண்ணி வணங்கி பணிந்தனர்.

கள்ளிச்செடிகளுக்குள் தவம் இருந்த தால் மக்கள் இவரை கள்ளயடி பிரம்மம் என்று அழைக்கலாயினர். பிற்றகாலத்தில் கள்ளிச்செடி களுக் கிடையை மக்கள் இவருக்கு ஒரு குடிசையை அமைத்துக் கொடுத்தனர்.

இவருடைய குருநாதர் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின் பங்குனி மாத குருபூஜை அன்று பொங்கல் வைத்து வழிபடுவதை வழக்கமாக வைத்திருந்தாராம். இதை சுவாமிகள் தன்னுடைய இறுதிக் காலம் வரை தொடர்ந்து செய்து வந்திருக் கிறார். இவரின் குருவின் சமாதி காஞ் சிபுரத்தில் உள்ளது.

சுவாமிகள் அடிக்கடி தல யாத்திரை செய்வது வழக்கம். சில காலம் பரோடா சமஸ்தானத்தின் ஆஸ்தான குருவாகவும் இருந்திருக்கின்றார். அம்மாசமுத்திரம்,



ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகளை தரிசித்து அவரின் உதவியோடு "பிரம்மோபதேசம்" என்ற சிவராஜயோக நூலை எளிய முறையில் அனைவரும் அறிந்து கொள்ள எழுதி வெளியிட்டார்.

பல ஊர்களில் இறைத்தொண்டும், பொதுத் தொண்டும், ஆற்றி தன் பக்தர்களுக்கு பல அற்புதங்களை செய்து காட்டினார்.

சுவாமிகளை புகைப்படம் எடுக்க வேண்டும் என்று பலர் முயன்றனர். ஆனால் சுவாமிகள் அனுமதி கொடுக்க வில்லை. ஒருமுறை தம் ஆத்ம சீடரின் வேண்டுகோளை ஏற்று, புகைப்படம் எடுக்க சம்மதித்தார். புகைப்படமும் எடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் புகைப்படத்தில் அவரின் பூத உடலும், ஆத்ம உடலும் தனித்தனியாக பதிவாகியிருந்தது.

அந்த அரிய புகைப்படம், கா.புதுப் பட்டியில் உள்ள சுவாமிகளின் சீவ பீட ஆலயத்தில் இன்றும் இருக்கின்றது. சுவாமிகளின் அனுமதி பெற்று அப்புகைப்படத்தை வெளியிட்டுள்ளோம். பக்தர்கள் தரிசனம் செய்து சுவாமிகளின் ஆசியைப பெறுங்கள்.

சுவாமிகள் உணவு, உறக்கம், உடைகளில் மிகவும் எளிமையாக இருப் பார். ஒரே வேலை உணவு உண்டு வெண்ணிற ஆடையை இடுப்பிற்கு மட்டும் உடுத்தி, கையில் பிரம்பும், மரத்தாலான பாதரச்சையையும் அணிந்திருப்பார். அனைவரையும், வயது வித்தியாசம், சாதி, மத பேதமின்றி, அண்ணா, அய்யா, அம்மா என்று தான் அழைப்பார்.

தன்னுடைய சமாதி ஆலயத்தை தான் உயிரோடு இருக்கும்போதே, தன் சீடர்களின் உதவியால் கருங்கற்களால் கட்டிக் கொண்டார். சீடர்களிடம் தான் 21.1.1941 ல் சமாதி ஆகப்போவதாக முன் கூட்டியே அறிவித்தார்.

அவர் கூறியதைப் போன்றே அதே தேதியில், நவமி திதி,விசாக நட்சத்திரம்,கடக லக்னம், துலா ராசி கூடிய நன்னாளில் மாலை 7 .31 க்கு சீவசமாதியானார்.

சுவாமிகள் தன் சீடர்களிடம், தன் இறப்பிற்காக யாரும் அழக்கூடாது, வருத் தப்படக்கூடாது. அதற்கு பதில் ஆனந்தமாக கொண்டாட வேண்டும் என்று கூறினார். தான் எப்போதும் தன்னை நாடிவரும் பக்தர்களை அருள் பாலிப்பேன் என்று உறுதியளித்தார்.

அவர்கூறியதைப்போன்றே அவரது சீடர்கள் அவரது சமாதி நாளை ஊர்மக்களுடன் ஒன்று கூடி, மேள தாளங்கள் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் சிவனடியார்கள் தேவாரம், திருவாசகம் முழங்க, சித்தரடியவர்கள் சித்தர் பாடல்



களை பாட கோலாகலமாக சமாதி செய்விக்கப்பட்டது.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஸ்ரீமத் கள்ளியடி பிரம்மம் சமாதி ஆலயம், கா.புதுப்பட்டி, காணப்பாடி அஞ்சல்,வடமதுரை, திண்டுக்கல்.

பேரூந்து வழித்தடம்:

சென்னை கோயம்பேடு திண்டுக்கல் சென்று அங்கிருந்து பேரூந்து மூலம் கா. புதுப்பட்டிக்கு செல்லலாம்.

புகைவண்டி வழித்தடம்:

சென்னை எழும்பூர் திண்டுக்கல் அங்கிருந்து பேரூந்து மூலம் கா. புதுப்பட்டிக்கு செல்லலாம்.

- (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

நந்தனார் என்ற திருநாளைப் போவார்

சோழ நாட்டில் ஆதனூர் என்னும் ஊரில் பிறந்தவர் நந்தன். தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்தவராக இருந்தாலும் இறைவனான சிவ பெருமானை தன் நெஞ்சிலே உயர்ந்த இடத்தில் வைத்து வணங்கி வருபவர். கோயில் முரசுகளுக்கு தோல் தைத்து கொடுப்பது. யாழ்களுக்கு நரம்பு செய்து தருவது தான் இவருடைய பரம்பரை வேலை.

அதில் கிடைக்கும் வருவாயை தனக்கும், தன் குடும்பத்திற்காகவும், செலவு செய்யாமல் சிவாலய திருப்பணிகளுக்கு என்று செலவு செய்வார். ஈசன், அந்த செலவுகளை நந்தனின் புண்ணிய கணக்கில் வரவு வைத்தார்.

நந்தனுக்கு வெகுநாட்களாக ஒரு மன வருத்தம் இருந்தது. நந்தன் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்ததால் அவர் கோயிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் கோயில் வாசலில் நின்றபடியேதான் சிவ பெருமானை மனதால் வணங்கி வருவார்.எப்படியாவது ஆலயத்திற்குள் சென்று இறைவனை சிவலிங்க ரூபமாக தரிசிக்க வேண்டும் என்று நீண்ட காலமாக ஆசைப்பட்டார். அதற்காக சிவபெருமானிடம் மானசீகமாக வேண்டி வந்தார்.



சிவபெருமானை கோயிலுக்குள் சென்று தரிசிக்க வேண்டும் என்று மற்றவர்களிடம் சொல்லும் போதெல்லாம், "அதெல்லாம் புண்ணியம் செய்தவர்களுக்குதான் கிடைக்கும். நமக்கு அந்த பாக்கியம் இல்லை. நினைப்புதான் பிழைப்பை கெடுக்கும் என்பார்கள். நீ தேவையில்லாத நினைப்பினால் பிழைப்பை கெடுத்துக்கொள்ளதே." என்று நந்தனின் சமுதாயத்தில்

உள்ளவர்களே கூறினார்கள்.

நந்தனார் தன் கணீரென்ற குரலில் சிவனை நினைத்து பாடல்களை பாடுவார். அதை கேட்டு பொறாமைகாரர்கள் எப்படியாவது நந்தனின் இசைத் திருப்பணியை தடுக்க வேண்டும் என திட்டமிட்டு, நந்தனுக்கு வேலை தந்துக் கொண்டிருந்தவரிடம் ஏதேதோ சொல்லி வேலையில் இருந்து நீக்கி விட்டார்கள்.

இதனால் கிடைத்துக் கொண்டிருந்த சொற்ப வருமானமும் இழந்தார் நந்தன். தாம் பட்டினி கிடப்பதை பற்றி கூட பெரியதாக கவலைப்படவில்லை நந்தன். சிவபெருமானுக்கு தன்னால் எதுவும் செய்ய முடியாமல் தாம் செய்து வந்த திருப்பணி தடைப்பட்டதே என்றுதான் மிகவும் மனம் வருந்தினார்.

திருப்புன்கூரில் இருக்கும் சிவபெருமானை தரிசிக்க வேண்டும் என்று நந்தனுக்கு நீண்டநாள் ஆசை இருந்தது. அதனால் திருப்புன்கூர் சென்றார். வழக்கம் போல் சிவாலயத்தின் வெளியே நின்றபடி சிவலிங்கத்தை தரிசிக்க மூலஸ்தானத்தை எட்டி எட்டி பார்த்தார் நந்தன்.

சிவலிங்கத்தை கண்ணாற காண முடியவில்லை. காரணம் நந்தி மறைத்து நின்றது. இதை கண்ட நந்தன், “அப்பனே! உன்னை காணவிடாமல் மாடு குறுக்கே நிற்கிறதே.” என்று கலங்கினார். அப்போது யாரும் எதிர்பாராத அற்புதம் அங்கே நிகழ்ந்தது. நந்தி, தான் இருந்த இடத்தில் இருந்து சற்றே விலகிக்கொண்டு நந்தன் சிவபெருமானை காண வழி விட்டது.

நந்தன் சிவபெருமானை கண்ணார தரிசித்து வணங்குவதற்காக நந்தி விலகியதை கண்டு அந்த ஆலயத்தில் இருந்த பக்தர்கள் திகைத்து நின்றார்கள்.

நந்தன், ஈசனின் கருணையை எண்ணி மகிழ்ச்சியுடன் வணங்கி சென்றார். அதனால்தான் இன்றுவரை திருப்புன்கூர் ஆலயத்தில் நந்தி விலகியே நிற்கிறது என்கிறது தல புராணம்.

ஒருநாள் நந்தன் சிவசிந்தனையோடு வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது, வானத்தில் மேகங்கள் ஒன்றாக கூடி சிவலிங்கமாக காட்சி காட்சி தந்தது. “நந்தா.. நீ சிதம்பரம் வா” என்று ஈசன் அழைத்தது போன்று அசரீரி கேட்டது.

அன்றிலிருந்து காண்போரிடம் எல்லாம், தாம் சிதம்பரம் செல்ல வேண்டும் என்றும், திருச்சிற்றம்பல நாதரை தரிசிக்க வேண்டும் எனவும் சொல்லியபடியே இருந்தார். சிதம்பரம் செல்ல பொருள் வசதி வேண்டி தன் முதலாளியிடம் சென்றார்.



நந்தனின் சிவபக்தியை

பயன்படுத்தி அவரை தன் பண்ணையிலும் வயலிலும் வீட்டிலும் நிறைய வேலை வாங்கிக் கொள்வாரே தவிர முதலாளி நந்தனுக்கு பணம் ஏதும் தர மாட்டார். கேட்டால் நாளை தருகிறேன் என்பார்.

இதுவே வாடிக்கையாகிப்போனது. நந்தனும், முதலாளி பாவம், அவரிடம் பணம் இருந்தால் கொடுத்துவிடுவார். அவரிடமும் பணம் இல்லையோ என்ணவோ, என்றவாறு வந்து விடுவார்.

நந்தனை யாராவது, "எப்போது நீ சிதம்பரம் செல்வாய்" எனக் கேட்டால், தன் முதலாளி நாளை பணம் தருகிறேன் என்று கூறியதை நம்பி, "நாளை போவேன்" என்று சொல்வார். இப்படியே ஆண்டுகள் நகர்ந்தது. முதலாளியும் பணம் தராமல் ஏமாற்றி வந்தார். நந்தனும்,கேட்போரிடம் எல்லாம், "நாளை சிதம்பரம் போவேன்" என்று அப்பாவியாக சொல்லி வந்தார்.

இருப்பினும் ஒரு நாள் நந்தன் பொறுமையிழந்தார். முதலாளியிடம் சென்றார். "சாமீ, நான் சிதம்பரம் போக வேண்டும். எனக்கு உதவி செய்யுங்க." என்று அழுது கேட்டார். இதனால் முதலாளிக்கு தர்மசங்கடமாகி விட்டது. "டேய் நந்தா, நீ சிதம்பரம் போயி என்ன செய்ய போறே? உன்ன அந்த ஊருக்குள்ளயே விட மாட்டாங்கடா. அப்புறம் எப்படி கோயிலுக்கு போய் சுவாமியை தரிசிப்பே." என்றார் முதலாளி. "சாமீ அதெல்லாம் என்னோட கவலை. நீங்க எனக்கு சிதம்பரம் போக பணம் தந்தா போதும்." என்றார் அழுதார் நந்தன்.



“சரி, உனக்கு பணம்தானே வேண்டும். அப்படி என்றால் ஒரு வேலை செய். என் வயலுக்கு சென்று, என்னுடைய நாற்பது ஏக்கர் நிலத்தையும் உழுது பயிர் செய்து அறுவடை செய்து முடி. பிறகு உனக்கு பணம் தருகிறேன். நீ தாராளமாக சிதம்பரம் போ.” என்றார் முதலாளி.

இதை கேட்டு அதிர்ச்சியடைந்தார் நந்தன். “என் அப்பனே! இது என்ன புதிய சோதனை. இந்த நாற்பதாயிரம் ஏக்கர் விவசாய நிலத்தையும் எப்போது பயிர் செய்து அறுவடை முடிப்பது? என்னால் சிதம்பரம் போகவே முடியாதா?” என்று பாலைவனம் போல இருந்த அந்த விவசாய நிலத்தில் அழுது, அழுது, மயங்கி விழுந்தார்.

தான் யார் என்றே தெரியாது இப்பூவுலகில் பிறந்து, தான் மனிதகுலம் என்பதையே பின்னால் அறிந்து கொண்ட மனிதன் தன் குலத்தையே மேல்குலம், கீழ்குலம் என்று பிளவுபடுத்தி, தன் மேலாண்மையை மனித குலத்தினிடையே விதித்த கேடுகெட்ட மனித குலத்தினிடையே தன்னைப் போன்றே வெகுளித்தனமாயும், குழந்தையைப் போன்ற மனமுடையவனுமாயும் உதித்து வாழந்திட்ட நந்தனுக்கு உதவி செய்ய அந்த சிவனே ஆர்வம் கொண்டான்

ஆம், நந்தனுக்காக ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார் ஈசன். விவசாய நிலம் அனைத்தும் பயிர் செய்து அறுவடைக்கு தயாராக இருந்தது. கண் விழித்து பார்த்த நந்தன் பெரும் மகிழ்ச்சி அடைந்தார். இறைவனை எண்ணி போற்றி பாடினார். இந்த அதிசயத்தை கண்டவர்கள், முதலாளியிடம் தகவல் சொன்னார்கள். முதலாளி விரைந்தோடி வந்தார். திகைத்து நின்றார். முதலாளியை கண்ட நந்தன் ஓடி வந்தார். “சாமீ. பயிர் அறுவடைக்கு தயாராகிவிட்டது. அறுவடை முடிந்தவுடன் நான் சிதம்பரம் போக உதவி செய்வீர்களா?” என்று அப்பாவியாக கேட்டார் நந்தன்.

நந்தனுக்கு இறைவனின் அருள் நிறைந்து இருப்பதை நேரிலேயே கண்டபிறகும் முதலாளி நந்தனை ஏமாற்றுவாரா என்ன? நந்தன் சிதம்பரம் செல்ல பண உதவி தந்து அனுப்பினார் வைத்தார்.

சிதம்பரம் சென்றார் நந்தனார். ஊருக்குள் செல்ல தயங்கி, தூரத்தில் இருந்தே சிதம்பர கோயில் கோபுரத்தை தரிசித்து பெரும் மகிழ்ச்சி அடைந்தார். கோயிலுக்குள் யாரும் அனுமதிக்கவில்லை என்றால் என்ன? சிதம்பரமே சிவன்தானே என்றுணர்ந்து, சிதம்பரம் மண்ணை கையில் அள்ளி நெற்றியில் பூசி கொண்டு ஊருக்கு வெளியே தங்கி இருந்தார் நந்தனார்.

அன்றிரவு கோவில் முக்கியஸ்தர்கள் மற்றும் தில்லைவாழ் அந்தணர்களின் கனவில் நடராஜப் பெருமான் தோன்றி, “நம் அடியவனான, “திருநாளைப் போவார்” சிதம்பரம் வந்திருக்கிறார். ஊருக்கு வெளியே தங்கி உள்ளார். அவர் மனம் கோணாது சிறப்புகள் பல செய்து நம்மிடம் அழைத்து வாருங்கள்.” என்றார் திருச்சிற்றம்பலநாதர்

மறுநாள் சிதம்பரமே திரண்டு ஒன்று கூடி பூரண கும்பமரியாதையுடன் “திருநாளைப் போவார்” என்று இறைவனால் அழைக்கப்பட்ட நந்தன்



என்கிற நந்தனாரை கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். அப்போது கூட்டத்தில் இருந்த ஒரு அந்தணர், நந்தனார் கோயிலுக்குள் நுழைய எதிர்ப்பு தெரிவித்தார்.

அதோடு மட்டுமின்றி மற்ற தில்லைவாழ் அந்தணர்களின் செயலை கேவலமாக விமர்சித்தார். "என்னமோ ஈசன் கனவில் வந்து சொன்னாராம். இவர்களும் ஒரு தாழ்த்தப்பட்ட குலத்தவனுக்கு கும்பமரியாதை செய்து கோயிலுக்குள் அழைக்கிறார்களாம். இதை ஏற்க முடியாது. இறைவன் கனவில் சொன்னது உண்மையாக இருக்குமானால் இங்கே ஒரு அக்னி பரீட்சை வைப்போம். திருநாளைப் போவார் என்று இறைவனே அழைத்ததாக நீங்கள் சொல்லும் இவர் அக்னியில் இறங்கி திரும்பட்டும் பார்க்கலாம்." என்று சொல்ல மக்கள் அனைவரும் அதிர்ந்தனர்.

ஆனால் நந்தனார் மனதில் எந்த பதட்டமும், அதிர்ச்சியும் இல்லை. "என் வாழ்வில் எத்தனையோ அற்புதங்களை செய்தார் என் இறைவனார் ஈசன். அவையெல்லாம் நானே எதிர்பாராதது. நான் சிதம்பரம் வருவதற்கே ஒரு அற்புதம் செய்து அனுப்பினார். இறைவனின் விருப்பதை யாராலும் தடுக்க இயலாது. அந்த அந்தணர் சொல்வதை போலவே செய்கிறேன்." என்றார் திருநாளை போவார்.

அந்தணரின் சவாலை ஏற்றுக் கொண்ட நந்தன் தீக்குழி இறங்கி மரணிக்கப்போவதை அந்நாளைய காழ்ப்புணர்ச்சி கொண்ட மக்களும், இறை நம்பிக்கையை மேலோட்டமாக கொண்ட மக்களும், இறை நம்பிகையற்ற மனிதர்களும் என பலதரப்பட்ட மக்கள் வேடிக்கை பார்க்க கூட்டம் கூட்டமாய் வந்து குவிந்தனர்.

மலையளவு விறகுகள் குவிக்கப் பட்டு தீ முட்டப்பட்டது தீ கொழுந்து விட்டு எரிந்தது. அந்த தீ குண்டத்தில் நந்தனார் கவலையின்றி, "திருச்சிற்றம்பலம்" என ஈசனை நினைத்தவாரே இறங்கினார். இறைவனின் பல அதிசயங்களில்

ஒன்று இங்க் நடந்தது. தீயில் இறங்கிய பிறகு, தண்ணீர் குளத்தில் இருந்து எழுந்து வருவதை போல எந்த தீங்கும் இன்றி, பட்டாடை உடுத்தி அழகிய தெய்வீக தோற்றத்துடன் சிரித்த முகத்துடன் வெளியே நடந்து வந்தார் நந்தனார்.

அந்த சமயத்தில் ஆலயத்திற்குள் மணியோசை எழும்பியது. அந்த மணி ஓசை, திருநாளை போவார் எனும் நந்தனாரை, "உள்ளே வா" என்று இறைவனே அழைப்பது போல இருந்தது. நந்தனார் கோயிலுக்குள் நுழைந்தார். கருவரையின் முன்னதாக நின்று நடராஜப் பெருமானை கண்குளிரக் கண்டார்.

அடுத்த நிமிடம், வெகு நாட்களாக தாய்,தந்தையை காணத ஒரு குழந்தை தாய் தந்தையரைப் பார்த்ததும் எப்படி உணர்ச்சி வயப்பட்டு அருகில் செல்லுமோ அதைப்போல, நந்தனாரும் நடராஜப் பெருமானை கண்டவுடன் ஓடிச்சென்று கருவறைக்கு நுழைந்தார். அதே கணம் கருவறைக்குள் தீப்பிழம்பு ஒன்று தோன்றியது. நந்தனார் ஒரு பெரும் ஜோதியாக இறைவனுடன் ஐக்கியமானார்.

இறைவனுக்கு அனைவரும் ஒன்றுதான். இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தூய்மையான அன்பு மற்றும் பக்தியை மட்டும்தான். நாம் தெய்வத்தின் குழந்தைகள் என்பதை ஆணிதரமாக நம்பிக்கையுடன் இறைவனை நினைத்து வாழ்ந்தால் கஷ்டங்கள் பனிபோல் விலகும். வாழ்வில் எந்நாளும் ஏற்றம் ஏற்றம் என்றும் ஏற்றமே.

ஓம் நமசிவாயா !

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

சாயி பக்தி லோயிற்தும் -1

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே! அநேக பாபா பக்த வாசகர்களின் கோரிக்கைக்கிணங்க நமது இதழில் மீண்டும் சாய் பக்த லீலாமிர்தம் தொடர்கின்றது. இது உங்களுக்குண்டான பக்கம். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களது அனுபவங்களை பிரதி மாதம் 15 தேதிக்குள் எங்களுக்கு வந்து கிடைக்குமாறு எழுதி அனுப்பவும். வாட்ஸ் அப்பில் தட்டச்சு செய்யத்தெரிந்தவர்கள் தட்டச்சு செய்து அனுப்பலாம். உங்களது அனுபவங்களுடன் உங்களது புகைப்படமோ அல்லது உங்களது குடும்ப புகைப்படத்தையோ அனுப்பலாம். பிரசுரிக்கப்படும்.

இம்மாதம், சாய் பக்தர் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை, திரு. சாய் உமேஷ் அவர்களுடைய அனுபவங்களை படித்து மகிழுங்கள்.

எனது பெரும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய சாய் மகராஜ் குருவைதேடி இதழ் ஆசிரியர், குருஜி திரு. ஸ்ரீராம்சாய் அவர்களுக்கும்,நம் இதழின் வாசகர்களான சாய் உறவுகளுக்கும், நிலக்கோட்டை சாய் உமேஸ்ன் பணிவான வணக்கம்.

சமீபத்தில், என் வாழ்வில் பாபா செய்த லீலையை, நம் உறவுகளுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதியன்று பணி நிமித்தமாக எனது காரிலேயே திருச்சி சென்று விட்டு அப்படியே என் தாய்மாமா வீட்டில் இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையில் நிலக்கோட்டை புறப்பட்டேன்.

நான் புறப்படும்போது எனது மாமா அவர்கள், பாபாவின் புத்தங்களையும், வழியில் உண்பதற்கு சில கடலை மிட்டாய் பாக்கெட்டுகளையும் கொடுத்தார். முதல்நாள் இரவு சரியாக தூங்காததால் களைப்பாக இருக்கும். நீ மட்டும் தனியாக கார் ஓட்டிச் செல்கிறாய். நடுவில் தூக்கம் வந்தால் கடலைமிட்டாய்களை சாப்பிட்டு சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு செல் என அறிவுரை கூறி என்னை வழியனுப்பி வைத்தார்.

திருச்சியில் இருந்து 110 கி.மீ வேகத்தில் சென்ற நான் காலை 11 மணிக்கு மணப்பாறையை கடந்து சென்றேன். அப்போதுதான் தற்செயலாக கடலைமிட்டாயைக் கவனித்தேன். கடலைமிட்டாய் சாப்பிடலாம் என எண்ணி வாகனத்தின் வேகத்தை சற்றே குறைத்தேன்.

50 கி.மீட்டர் வேகத்தில் கடலை மிட்டாயை

சாப்பிட்டுக்கொண்டே வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தேன். அப்போது, சாலையில் திடீரென, "டமார்" என்ற சத்தத்தைக் கேட்டு


அதிர்ந்தேன். எண்ணவோ, ஏதோவென காரின் பக்கவாட்டு கண்ணாடியில் பார்த்தால், பின்னால் ஒரு கண்டெய்னர் லாரியும், பக்க வாட்டில் ஒரு இன்னோவா காரும் வந்து கொண்டிருந்தது.

இன்னோவா காரின் டிரைவர், என்னைப்பார்த்து ஏதோ சைகை செய்தார். அது எனக்கு சரியாக புரியாததால், காரை இடதுபுறமாக நிறுத்தி கேட்போம் என்றவாறே, காரின் ஸ்டியரிங்கை திருப்ப முயற்சிக்கும் போதுதான், திருப்ப முடியாமல் மிகக் கடினமாக இருப்பதை உணர்ந்தேன். உடனே நம் காரின் டயர் தான் வெடித்திருக்கின்றது என்று சுதாரித்துக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு, காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டேன்.

மனம் படபடவென்று அடித்துக் கொள்ள காரில் இருந்து இறங்கி, பின்பக்க டயரைப் பார்க்கின்றேன். டயர் வெடித்து புகை வந்து கொண்டி ருக்கின்றது.

சாய்ராமா! நல்லவேளை தப்பி னேன். மசூதி தேவனே! இதென்ன சோதனை. ஏற்கனவே ஏகப்பட்ட சோதனைகளை தாங்கமுடியாமல் மனமொடிந்த நிலையில் திக்கித் தினறும் என்னை ஏன்னய்யா இன் னும் சோதிக்கின்றீர். நடுக்காட்டில் நின்று தவிப்பது போல் நான்கு வழிச்சா லையில் நின்று தவிக்கின்றேன். திக்கு திசை தெரியவில்லை. காரை சரிசெய்ய நீதானையா உதவ வேண்டும். என

நெஞ்சில் கைவைத்துக் கொண்டு



– சாய் அடியவன்
சாய் உமேஷ், நிலக்கோட்டை.
9952730818.

நிற்க, என்னருகே இன்னோவா கார் வந்து நிற்கின்றது.

அதன் ஓட்டுனர் என்னைப் பார்த்து, நல்லவேளை, பதட்டப்படாமல் ஓரம்கட்டி நிறுத்தினீர்கள். இல்லை என்றால் பெரிய விபத்து நேர்ந்திருக்கும் என்று கூற, நானோ அவரிடம் என்னுடைய காரின் டயர் தான் வெடித் தது என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் என்னைப் பார்த்து சைகை செய்ததால் நான் வண்டியை நிறுத்த முயற்சித்தேன். அப்போதுதான் எனது வண்டியில்தான் பிரச்சனை என்பதையே என்னால் உணர முடிந்தது. உங்களுக்கு என் நன்றிகள் என்றவாறே சற்று பதட்டத்துடன் நின்றேன்.

அப்போது நடப்பதை எல்லாம் சற்று தூரத்தில் இருந்து தன்னுடைய மொபெட்டில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த 80 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் மொபெட்டை

எடுத்துக் கொண்டு என்னருகே வந்தார். வந்தவர் என்னைப்பார்த்துக் கூறினார். நல்லவேளை, நீ வண்டியை மெதுவாக ஓட்டி வந்தாய்! வேகமாக ஓட்டி வந்திருந்தால் இந்நேரம் நீ இறந்திருப்பாய். உன் நல்ல காலம் பிழைத்துக் கொண்டாய் என்றார்.

அவரே மேலும், இங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் சென்றால், ஒரு மெக்கானிக் செட் இருக்கின்றது. நீ போகிறாயா? இல்லை நான் அவனை வரச்சொல்லட்டுமா? என்று அதட்டலோடும், உரிமையோடும், கேட்டுக் கொண்டே, என் பதிலை சற்றும் எதிர்பாராமல், தன் சட்டைப பையில் இருந்து மொபைலை எடுத்து யாருக்கோ போன் செய்து, விபத்து நடந்த இடத்தையும், விபரத்தையும் கூறி, உடனே வா என்று விரைவு படுத்தினார்.

சிறிது நேரத்தில், எங்களருகே ஓர் ஆம்னி வேன் வந்து நின்றது. அதில் இருந்து ஒரு மெக்கானிக்கும், மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவனும் இறங்கினர். என்னிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஸ்டெப்னி டயரை கழட்டி மாற்ற முயன்றார். ஆனால் அதிலும் காற்று கம்மியாக இருந்ததால். அருகில் இருக்கும் பெட்ரோல் நிலையம் சென்று காற்று பிடித்துக் கொண்டு வந்து டயரை கழட்டி மாற்றிக் கொடுத்தார்கள்.

அதுவரை எனது காருக்கருகிலேயே நின்று கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். நான் பஞ்சரான டயரை டிக்கியில் போட்டுவிட்டு திரும்பிப் பார்க்கின்றேன். அந்தப் பெரியவரைக் காணவில்லை. மொபெட் சத்தம் கூட கேட்கவில்லை. பத்து செகண்டிற்குள் அவரை காணவில்லை. ஏதோ மாயாஜாலம் நடந்தது போல திடீரென அவரைக் காணவில்லை. புராணத்தில்தான் இவ்வாறு நடக்கும் என்று படித்திருக்கின்றேன். இந்த கலியுகத்திலும் இப்படி நடக்குமா என்ன? என வியப்பின் உச்சிக்கே சென்றேன்.

அது நான்கு வழிச்சாலை என்பதால், கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவரைக் காணவில்லை. அநாதரவாய் நின்ற எனக்கு, தக்க சமயத்தில் ஆறுதல் தந்து உதவியும் செய்த பெரியவருக்கு நன்றி சொல்ல முடியவில்லையே என்று மனம் வருத்தப்பட்டது. எனவே மெக்கானிக்கிடம் அந்த பெரியவருக்கு நான் நன்றி கூறினேன் என்று கூறிவிடுங்கள் என்று கூறினேன்.

அதற்கு அந்த மெக்கானிக்கோ, யாருக்கு, உங்கள் அருகில் நின்றிருந்தாரே அவருக்கா, அவர் யார் என்றே எனக்குத் தெரியாதே, அவர் உங்களுக்கு தெரிந்தவர் என்றல்லவா நான் நினைத்தேன். என்று கூற எனக்கு தூக்கிவாரிப்போட்டது.

அப்படியானால், மெக்கானிக்கை போன் செய்து அழைத்தாரே, உங்களுக்கு போன் வரவில்லையா? என்றேன். வந்தது, நான் தான் பேசினேன் என்றார் மெக்கானிக். போனில் என்ன கூறினார்கள், என்றேன். இந்த இடத்தைக்கூறி காருக்கு டயர் மாற்ற வேண்டும் உடனே வாருங்கள் என்றார்கள். நானும் வந்தேன் என்றார் மெக்கானிக்.

எனக்கு குழப்பத்திற்கு மேல் குழப்பமாக இருந்தது. பெரியவர்தான் போன் பேசினார். ஆனால் மெக்கானிக் அவரை தெரியாது என்று

கூறுகின்றார். சரி, அதற்குகூட வாய்புகள் இருக்கின்றது. எனக்கு சட்டென்று ஒரு யோசனை உதித்தது. உடனே மெக்கானிக்கிடம், உங்களுக்கு வந்த போன் நம்பரை கூறுங்கள் என்று அவரி டம் நம்பரை வாங்கி போன் போட்டால் மறுமுனையில் இந்நம்பர் தவறானது என்று வந்தது. பலமுறை முயற்சித்தும் இதே நிலைதான். இந்தக் கட்டுரையை எழுதும் இந்த நிமிடம் வரை முயற்சித்தேன். அதே பதில்தான்.

சரி, இவை எல்லாம் அந்த சாய் தேவனின் லீலையாகத்தான் இருக்க வேண்டும். இச்சிறியேனையும் மதித்து இவனுக்கும் உதவி செய்ய வேண்டும் என்று மனமிறங்கிய அந்த தெய்வக்கிழவனை மனதிற்குள் துதித்துக் கொண்டு, மெக்கானிக்கிடம் எவ்வளவு பணம் என்றேன். ஆனால் அவரோ, நடந்த சம்பவத்தால் என்னைவிட ஆச்சர்யத்தில் மூழ்கியவராக, எனக்கு பணம் வேண்டாம் என்று மறுக்க நான் வற்புறுத்தி அவரின் சட்டைப்பையில் ஒரு தொகையை வைத்துவிட்டு காரை எடுத்தேன்.

என்னால் காரை ஓட்ட இயலவில்லை. சீரடி நாதனின் உதவியை நினைத்து எனக்கு அழுகைதான் வந்தது. நான் நன்றாக உணர்ந்தேன்.நடு ரோட்டில் பெரும் விபத்து நேர்ந்து, ஓர் இழப்பை என் குடும்பம் எதிர் கொள்ள இருந்ததை மாற்றி, சிறு விபத்தாக, அதுவும் நான் உணராவண்ணம் அவ்விபத்தை நிகழ்த்தி, உடனே அவரே நேரில் வந்து எனக்கு உதவி செய்து, நான் மீண்டும் பயணத்தை தொடரச் செய்து மறைந்து போன தெய்வம், கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் சாயி நாதனை இன்றி வேறு யாராக இருக்க முடியும்.

துரும்பென என்னை தன் நெஞ்சில் சுமந்து காவல்காக்கும் கலியுக பரமகுரு, மகிமை பொருந்திய மசூதி மாயி, பகவான் சாயிநாதனே என்பதில் எனக்கு சிறிதளவும் அய்யமில்லை.

என் சாய் தகப்பன், என்னருகிலேயே நின்று, என்னுடன் பேசி, எனக்கு உதவி செய்து, கண நேரத்தில் மறைந்து போனதை, மீண்டும், மீண்டும் நினைத்துக் கொண்டே, ஜென்ம ஜென்மோ ஜென்மி ஸ்ரீ சரண் ஸ்ரீ பாக்யசாய், எனும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே காரை செலுத்தினேன்.

நான் பாபாவை நினைத்த அந்த கணம் எனக்கு எதிரே வந்த வாகனத்தின் முகப்புக் கண்ணாடியில் புன்னகை தவழும் முகத்தோடு கையை உயர்த்தி ஆசி நல்கும் சாயி தேவனின் படம் என்னைப பார்த்து ஆசி வழங்கியது. என் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய் வழிந்தது.

பாபா இன்னமும் நம்முடன் வாழ்கிறார் என்பதற்கு இதைவிட சான்று உண்டோ?

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

ஸ்ரீ வல்லப சரிதாம்ருதம் வெளியீட்டு விழா

திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் உள் தூண்டுதல் மூலமாக தமிழில் மொழி பெயர்த்துள்ள, "சம்பூர்ண ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதாம்ருதம்" என்ற பெருநூலை அமிர்த கடைசலைப் போன்று இல குவாக, பருகுவதற்கு ஏற் றார்போல் எளிய தமிழில் அழகுற அமைத்து தந்த, நூல் வெளியீட்டுவிழா 21.7.22 அன்று மாலை மந்தைவெளி மந்த்ரா ஹாலில், எளிய முறையில் மிக ஆனந்தமாக நடைபெற்றது.

காஞ்சிபுரம், மேல்சிறுணை,ஸ்ரீ சக்ர ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம். பீடாதிபதி, மாதா ஸ்ரீ வல்லபானந்தமயி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழாவினை தொடங்கிவைத்தார்கள்.

விழா நிகழ்ச்சிகளை "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர்சாய் அவர்கள் தொகுத்து வழங்க விழா இனிதே துவங்கியது.

மாதா ஸ்ரீ வல்லபானந்தமயி அவர்களின் குருபந்து, ஸ்ரீமான் தத்த கோபாலகிருஷ்ணன் என்ற தத்த மாமா அவர்கள், தத்த பரம்பரையைப் பற்றி சிறப்பானதொரு முன்னுரையை அருளினார்கள்.





அதைத்தொடர்ந்து, தமிழ்நாடு முன்னாள் தலைமைச் செயலாளர்,திரு கே.சண்முகம் ஐ.ஏ.எஸ் அவர்கள், தனது ஆன்மீக அனுபவ சொற்பொழிவை வழங்க, தொடர்ந்து, சிவபுரம் சிவாகம பாடசாலை முதல்வர், பேராசிரியர் சிவஸ்ரீ திரு. ஏ.வி. சுவாமிநாத சிவாச்சார்யார் அவர்கள் குருவின் பெருமைகளை அழகு



தமிழில் உரையாடினார்கள்.

அடுத்து வந்த ஆன்மீக உபாசகப் பெருந்தகை திரு. நாகை முகுந்தன் அவர்கள், தனது பல்சுவைப் பேச்சால் அவையை கலகலப்பூட்டினார்கள். அவரைத் தொடர்ந்து, பல்கலை வித்தகர் திரு. ஸ்ரீகவி அவர்கள் சிறப்பானதொரு உரையை நிகழ்த்தி நிறைவு செய்தார்கள்.

இறுதியாக, திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தி விழாவை இனிதே நிறைவு செய்தார்கள். விழாவில் பங்கேற்ற அனைவரும் இனியதொரு இரவு விருந்தை உண்டு களித்து, ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபரின் ஆசியோடு பிரியாவிடை பெற்றனர்.

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் 1320 ஆம் ஆண்டு இன்றைய ஆந்திர மாநிலம், பீதிகாபுரத்தில் அவதரித்தார். இப்பூமியில் 30 ஆண்டுகள் தன் ஸ்தூல உடலோடு வாழ்ந்திருந்தாலும், இன்றும் தன் சூட்சும உடலோடு வாழ்ந்து வருகின்றார். தான் இருப்பதை இன்றும் தன் பக்தர்களுக்கு அவ்வப்போது உணர்த்தி வருகின்றார்.

யோக ரகஷ்யங்களும்,உபநிஷத கோட்பாடுகளும் நிரம்பிய இவரது வாழ்க்கை வரலாற்றினை, ஸ்ரீ ஸ்ரீபாத வல்லப சரிதாம்ருதம் என்ற தலைப்பில் அவரின் சமகாலத் தவரான திரு. ஸ்ரீ சங்கர் பட் என்ற அடியவருக்கு ஸ்ரீ பாதரே தன் சோதி சொருபத்தினைக் காட்டி சூட்சுமமாக அவருக்கு வழிகாட்டி, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுதப்பெற்று, தகுந்த காலமாகிய 2001 ஆம் ஆண்டு பக்தர்களின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டது.

இந்நூல் அதுவரை ஸ்ரீ பாத





ஸ்ரீவல்லபரின் தாய் மாமா சந்ததியை சேர்ந்தவர்களால் பாதுகாக்கப்பட்டு, மல்லாடி ஸ்ரீனிவாசலு என்பவரின் மூலம், முதன் முதலாக தெலுங்கு மொழியில் "ஸ்ரீ ஸ்ரீ பாத வல்லப சரிதாம்ருதம்" என்ற நூல் வடிவில் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதத்தை பலர் மொழிகளில் எழுதி மொழியாக்கம் செய்திருந்தாலும், அந்த நூல்களில் எல்லாம் விடுபட்ட பலபகுதிகளையும் சேர்த்து, பல நூல்களில் இருந்த கருத்துக்களையும் ஒப்பு நோக்கி ஆய்வு செய்து, ஒரு முழு நிறைவான சரிதாம்ருதமாக இந்நூலை திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் தமிழில் வெளிகொண்டு வந்திருப்பது வெகு சிறப்பு.

526 பக்கங்களில் அர்ப்பணிப்புடன் திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களால், தமிழில் அற்புதமாக மொழி பெயர்க்கப்பட்ட இந்நூலை அனைவரும் வாங்கி பாராயணம் செய்து பயன் வேண்டும். ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அனுகிரகம் உங்கள் இல்லம் முழுவதும் நிரம்பித் ததும்பி அனைவரும் அனைத்து நலன்களும் பெற்றுய்ய வேண்டும் என்பதே எங்களது அவா.

<u>நூல் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:</u>

ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம்,

போன்: 7305548119.



எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

ஸ்ரீ தத்தாத்ரேயர் சரித்திரம்

யுனைடெட் ஹேண்ட்ஸ் அறக் கட்டளை வெளியிட, திரு. சாந்திப் பிரியா (எ) ஜெயராமன் அவர்கள் எழுதிய ஸ்ரீ தத்தாத்ரேயர் சரித்திரம் என்ற நூல் பாமர மக்களுக்குப் புரியும் வண்ணம் புராணக் கதைகளுடன் விவரிக்கப்பட்டாலும், ஆங்காங்கே

ஸ்ரீ தத்தரின் தத்துவமான "அனைத்தும் ஒன்றே" என்றே அற்புதக் கருத்துக்கள் தென்படுவது மனதிற்கு மகிழ்சியை ஏற்படுத்துகின்றது.

ஸ்ரீ தத்த சரித்திரத்தின் ஏழு அத்தியாயங்களும் சிறப்பாக தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. முதல் அத்தியாயம் ஸ்ரீ தத்தாத்ரேயர் பிறப்பு பற்றிய விளக்கமும், அத்திரி முனிவர் அனுசூயா தேவி ஆகியோருடைய கதைகளும், இரண்டாவது அத்தியாயத்தில், தத்தாத்ரேயர் யார்? என்ற யது குல மன்னனின் சந்தேகத்திற்கு ஸ்ரீ தத்தர் கூறும் பதிலும், தனது 24 குருமார்களைப்பற்றிய தெளிவான விளக்கமும், விவரிக்கப் பட்டிருக்கின்றன.

மூன்றாம் அத்தியாயத்தில், ஸ்ரீ தத்தர், கார்த்தவீர்யனுக்கு, ஆன்மா, பரமான்மாவைப் பற்றிய தத்துவங்களை விளக்கிக் கூறி புரிய வைப்பதும், நான்காவது அத்தியாயத்தில், ஸ்ரீ தத்தாத்ரேயரும் பரசுராமரும் எங்கே சந்தித்தனர் எப்படி சந்தித்தனர் என்பதைப் பற்றிய விரிவான விளக்கமும் கூறப்படுகினறன.

ஐந்து மற்றும் ஆறாவது அத்தியாயத்தில், ஸ்ரீதத்தாத்ரேயரும் அவரது பக்தர் ஸ்ரீ தத்தோத்பவாவும், மற்றும் சத்ருஜித்தினுடைய கதைகள் மிக விபரமாக சொல்லப்படுகின்றது. ஏழாவது அத்தியாயத்தில், ஸ்ரீ தத்தரின் மிகச்சிறந்த பக்தரான விஷ்ணுத்தரின் கதையுடன் ஸ்ரீ தத்தாத்ரேயர் பாராயணம் நிறைவடைகின்றது.

ஸ்ரீ தத்தரின் சரிதத்தை பாராயணம் செய்பவர்களின் பித்ரு தோசம் நிவர்த்தியாகும் என்று இப்புத்தகத்தை வெளியிட்ட யுனைடெட் ஹேண்ட்ஸ் அறக்கட்டளைக்கு குரு அருளினால் உணர்த்தப்பட்டது என்று கூறப்ப டுகின்றது.

மேலும் ஸ்ரீ தத்தரின் சரிதத்தை பாராயணம் செய்வதன் மூலம் பித்ரு தோசம் நிவர்த்தியாகும், குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் ஏற்படும். பேய், பிசாசு மற்றும் தீய ஆத்மாக்களின் தீய விளைவுகளை ஒழிக்க முடியும். மற்றும் ஞான மார்க்கத்தில் செல்ல தெளிவான வழி கிடைக்கும் என்று இதன் ஆசிரியர் விவரிக்கின்றார்.


ஸ்ரீ தத்தர் தன்னுடன் எப்பொழும் வைத்திருக்கும் பொருட்களின்

சிறப்புகளாக ஆசிரியர் கீழ் கண்டவாறு குறிக்கின்றார்.

சுயநலமின்றி கேட்ட அனைத் தையும் தத்தம் செய்து உலகையும், தர்மத்தையும், காப்பதைக் குறிக்கும் வகை யில் பசுவும், ஆன்மீக வேதம் நான்கை குறிக்கும் வகையில் நான்கு பைரவர்களும்,

தான் என்ற அகங்கா ரத்தை குறிக்கும் வகையில் திரிசூலமும், அறியாமையை அழித்து ஒருவனுடைய மனசாட்சி யை தட்டி எழுப்புவதற்காக கையில் குடுகுடுப்பையும்,

முக்காலத்தையும் கடந்து நிற்பவர், அனைத்து காலத்தையும், தானே இயக்குபவர், ஆரம்பமும், முடிவும் அற்றவர் என்பதைக் குறிக்கும் வகையில் கையில் சுதர்சன சக்கரமும்,



உள் ஆன்மாவை தட்டி எழுப்பும் விதத்தில் ஓம் என்று ஒலிக்கும் சங்கு. பிறந்த அனைத்தும் அழியும் என்பதைக் குறிக்க விபூதி, நம்மிடம் உள்ளவற்றில் பகிர்ந்து கொள்ள முடிந்தவைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை குறிக்க பிச்சைப் பாத்திரம். எப்பொழுதும் பகவானுடைய நாம செபம் செய்ய வேண்டும் என்பதற்கு அடையாளமாக செப மாலையுடன் ஸ்ரீ தத்தர் காட்சியளிக்கின்றார்.

திகம்பரா திகம்பரா, ஸ்ரீபாத ஸ்ரீ வல்லப திகம்பரா!

திகம்பரா திகம்பரா, ஸ்ரீ தத்ததேவா திகம்பரா!

இப்புத்தகத்தை நீங்களும் படித்து பயன் பெற வேண்டும் என விரும்பினால் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு புத்தகத்தை பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகத்தின் விலை: 116 ரூபாய்

தொடர்பு கொள்ள வேண்டிய

வாட்ஸ் அப் எண்: 917548891417.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர். ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.
திரு.சுடலை முத்து. தூத்துக்குடி.ரூ.1000
திருமதி.சுமதி ராமூர்த்தி.ரூ.1000.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800
திருமதி.சாந்தி. மந்தைவெளி.ரூ.500.
திருமதி.சுகன்யா துரைராஜ் சென்னை.ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.
திருமதி. நித்யா. கூடுவாஞ்சேரி.ரூ.500.
திரு.டி. கோவிந்தராஜூ, வேளச்சேரி. ரூ.500

திருமதி. வாழ்க வளமுடன் சுமதி, பெரியார் நகர். ரூ.500.
திரு.ஹரி பிரசாத். AYK. ரூ.500.
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. திலகம் கனி. கதிர். ரூ.400.
திரு.சம்பந்தம். பெரியார் நகர். சென்னை. ரூ.300.
திருமதி.எஸ்.பார்வதி.உள்ளகரம்.ரூ.300
செல்வி.ஆர்.ஹரினி.வில்லிவாக்கம். ரூ.201.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.உமா சக்திவேல். AYK.ரூ.200.
திருமதி. வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திரு. ஐஸ்வர்யா. டி நகர். ரூ.200.
திரு.வி.நாகராஜன். ஆதம்பாக்கம். ரூ.200
திரு.ஜெ.ஜெகதீசன். சென்னை துறைமுகம்.ரூ.100
திருமதி. வசந்தி. சென்னாய் நகர்.ரூ.100.
திருமதி.வனஜா. வானகரம்.ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.
திருமதி.உமா முருகன். AYK.ரூ.100.
திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம். ரூ.100.
திரு.சிவா அரிசி மளிகை பெரியார் நகர் ரூ.50.
திரு. ஏ.ராஜேந்திரன்.பெரியார் நகர். ரூ.50.
திரு.காரத்திகா வர்ஷினி. சரோஜினி நகர்.ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. மகேஷ் பாபு. குடந்தை.ரூ.500.
திரு. நாகராஜன். திருச்சி. ரூ.500
திரு. மனவாளன். ஜெயங்கொண்டம்.ரூ.400.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068